# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்



ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1



இதழ் 259 சனி, நவம்பர் 04, 2023 16 பக்கங்கள்


அகிலன்

## நிர்மலா சீதாராமன் விஜயம் சொல்லியிருக்கும் செய்தி?!



## காஸாப் போரின் புதிய கட்டம்

### அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் விடுக்கும் சவால்

தமிழில்: ஜெயந்திரன்



## யாழ் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளை குழப்ப மேற்கொள்ளப்படும் சதி

சுகாஸ் ஊடகப் பேச்சாளர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி




© 2023 இலக்கு இணையம்

## பண்ணையாளர்களுக்கு ஆதரவாக கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்



சிங்கள மக்களாலும், இலங்கை அரசினாலும் திட்டமிட்ட வகையில் கையகப்படுத்தப்படும் தமிழ் மக்களின் மேச்சல் தரை காணிகள் மற்றும் விவசாய நிலங்களை மீட்பதற்கான போராட்டத்தை கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் உள்ள பண்ணையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த போரட்டம் தொடர்பில் இலங்கை அரசு அக்கறை கொள்ளவில்லை என்பதுடன், அதனை முறியடிக்கும் திட்டங்களை சிங்கள பௌத்த துறவிகள் மற்றும் அரசியல்வாதிகளை கொண்டு அது முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது புலம்பெயர் அமைப்புக்களோ இது தொடர்பில் அனைத்துலக மட்டத்தில் இராஜதந்திர நகர்வை மேற்கொள்ளாத

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## காசா குழந்தைகளின் கல்லறைகளாக மாறிவருகின்றது – ஐ.நா

காசா சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் கல்லறைகளாக மாறிவருவதாகவும், 10 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை கொல்லப்படுவதாகவும் ஐ.நாவின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. இதுவரையில் அங்கு 3542 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அதன் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் ஜெனீவாவில் செவ்வாய்கிழமை (31) தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் குண்டுகளால் மட்டும் கொல்லப்படவில்லை நீரின்றியும் இறக்கின்றனர். அங்குள்ள மக்களின் தேவைகளுடன் ஒப்பிடும்போது 5 விகித நீரே வழங்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசயம், இதுவரை இடம்பெற்ற தாக்குதல்களில் 3542 சிறுவர்கள் உட்பட 8525 பொது மக்கள் காசாவில் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 2187 பெண்கள் எனவும் 21,000 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பாலஸ்தீனத்தில் காசாவில் இடம் பெறும்




மனிதப் பேரவலத்தை ஐ.நா தடுத்து நிறுத்த முடியாத மனவேதனையில் நியூயோர்க்கைத்தயமாகக்கொண்ட மனித உரிமைகண் ஆணைக் குழுவின் தலைவர் கிரக் மொகபீர் தனது பதவியை துறந்துள்ளார்.

ஏனைய நாடுகளில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களை தடுப்பதில் கடைப்பிடிக்கும் விதிகளை ஐ.நா இஸ்ரேல் விடையத்திலும் கடைப்பிடிக்க வேண்டும் ஆனால் அது அவ்வாறு இல்லை என தனது பதவி விலகலுக்கான காரணத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

## மாவீரர் துயிலும் இல்லங்களை துப்பரவாக்கும் பணிகள் ஆரம்பம்



நவம்பர் மாதம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் விடுதலைக்காக போராடி தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகொள்ளும் மாதமாகும்.

தமிழ் மக்களின் இனவிடுதலை கோட்பாடுகளை அழிக்கும் நோக்கத்துடன் இலங்கை அரசு மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்தபோதும், அழிக்கப்பட்ட இடங்களை துப்பரவு செய்து அதில் விளக்கேற்றி வணங்கி அஞ்சலி செலுத்துவதை தமிழ் மக்கள் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருவது வழக்கம்.

இந்தவருடமும் அதற்கான பணிகளை தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிளும், தமிழ் மக்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை(2) வன்னிவிளாங் குளம் கொடிகாமம், தரவை போன்ற இடங் களில் உள்ள

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## தாய்வானில் மூன்றாவது களமுனை – பொலிற்றிக்கோ



தாய்வானில் மூன்றாவது களமுனை திறக்கப்படப் போவதாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட பொலிற்றிக்கோ ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மிகப்பெரும் போரை நடத்த தற்போது தயாராகவில்லை என்பதை பைடனின் ஓவல் காரியரலய பேச்சு கோடிட்டு காட்டியபோதும் தற்போது இடம்பெறும் உக்ரைன், இஸ்ரேல் போர் என்பது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கும், ரஸ்யா, சீனா, ஈரான் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் போராகவே பார்க்கப்படுகின்றது.

பைடனின் பேச்சு இந்த இரு களமுனைகளையும் ஒன்றாக பார்ப்பதாகவே தெரிகின்றது. எனவேதான் இரு போருக்கான நிதி வழங்குவதிலும் அமெரிக்கா அதிக அக்கறை காட்டுகின்றது. அதேசமயம், மூன்றாவது களமுனையாக தாய்வான் போர் விரைவில் ஆரம்பமாகும் அறிகுறிகள் தென்படுகின்றன. எதிர்வரும் ஒரு இரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சீனாவின் எல்லையில் உள்ள நகரத்தை மியான்மார் இழந்தது



சீனாவிற்கு இருகில் உள்ள நகரத்தை கடும் சமரின்ன பின்னர் மியான்மார் அரசியிடம் இருந்து ஆயுதக்குழுவினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தசம்பவமானது 2021 ஆம் ஆண்டு இராணுவப்புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றிய அரசுக்கு மிகப்பெரும் பின்னடைவாக கருதப்படுகின்றது. சீனாவின் யுனைன் மாநிலத்திற்கு அருகில் உள்ள இந்த நகரம் சீனாவுக்கும் மியான்மாருக்கும் இடையிலான 1.8 பில்லியன் டொலர் வர்த்தகத்தின் முக்கிய பாதையாகும்.

மியாமன்மாரின் வடக்கு பகுதியில் உள்ள சான் மாநிலத்தில் கடந்த பல நாட்களாக அரச படையினருக்கும், 3 இனங்களை சேர்ந்த குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இஸ்ரேல் – ஹமாசுக்கான ஆயுதத் தடையை கோருகின்றது மன்னிப்புச்சபை

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதல்களினால் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படுவதால் இந்த இருவருக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுவதை தடை செய்ய வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச்சபையின் மத்திய கிழக்கிற்கான பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

பெல்ஜியத்தில் உள்ள நான்கு வர்த்தக அமைப்புக்கள் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதி வர்த்தகத்தை புறக்கணிக்கப்போவதாக தெரிவித்துள்ள நிலையில் கடந்த புதன்



கிழமை (2) மன்னிப்புச்சபை இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு அதிகளவு ஆயுதங்களை அமெரிக்காவும், ஜேர்மனியுமே வழங்கி வருகின்றன. வெள்ளைமாளிகை இஸ்ரேலுக்கு 14 பில்லியன் டொலர்கள் நிதி உதவியையும் வழங்க தீர்மானித்துள்ளது.

## காசாவில் இடம்பெறும் தொடர் மோதல்களில் 17 இஸ்ரேலிய படையினர் பலி



காசாவிற்குள் மட்டுப் படுத்தப்பட்ட தரைத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ள இஸ்ரேலிய படையினருக்கு எதிராக ஹமாஸ் படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் இதுவரையில் லெப். கேணல் தர அதிகாரி உட்பட 17 படையினர் கொல்லப்படடதாகவும் 25 இற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை (3) தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் ஜுனின் பள்ளத்தாக்கில் உள்ள அல் மரி நிலைகள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக கிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலின் காலாட் படையினர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சீனத் துணையால் முன்னெடுக்கப்படும் சிங்கள இறைமை ஈழத்தமிழர்களின் இறைமை இழப்பு ஈழத்தமிழ் அரசியல்வாதிகளாலும் அமைப்புக்களாலும் ஏற்படுகிறது

சீனா கடந்த மாதத்தில் 17ம் 18ம் நாட்களில் தனது "மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சியின்" பத்தாவது ஆண்டு நிறைவில் 150க்கு மேற்பட்ட நாடுகளுடனும் 30க்கு மேற்பட்ட அனைத்துலக அமைப்புக்களுடனும் இருதரப்பு உடன்படிக்கைகளின் வழி உலகெங்கும் அகலக்கால் பதித்துள்ள சாதனையின் அடிப்படையில் மேலும் இதற்கான மூன்றாவது அனைத்துலக ஒத்துழைப்பை வளர்க்கும் மாநாட்டை 20 நாடுகளின் தலைவர்களினதும் 140 நாடுகளின் உறுப்பினர்களதும் வருகையுடன் முப்பதுக்கு மேற்பட்ட அனைத்துலக அமைப்புக்களின் பங்கேற்புடனும் வெற்றிகரமாக நிகழ்த்தியது மட்டுமல்லாமல் இந்த அனைத்துலகத் திட்டம் தொடர்பான தனது நோக்கிலும் போக்கிலும் காலத்துக்கு ஏற்ற புதிய கொள்கை வகுப்பையும் தெளிவாக்கியுள்ளது. இது குறித்து ஈழத்தமிழர்களுக்கு அறியப்படுத்துவது இலக்கின் கடமையாக உள்ளது.

இம்மாநாட்டின் மையப்பொருளாக "உயர்தர மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சிக்கான அனைத்துலக ஒத்துழைப்பு : ஒருமித்த பொதுவான வளர்ச்சி மற்றும் வழமைகள்" என்பதனை கட்டமைத்ததின் மூலம் சீனா இத்திட்டத்தில் இணைக்கப்படும் ஒவ்வொருநாட்டையும் மக்கள் இனங்களையும் அவர்களும் பயன்பட்டுத் தானும் பயன்பெறும் பங்காளர்களாக இப்பொழுது மாற்றியுள்ளதை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

1945ம் ஆண்டுக்குப்பின் தற்போது மீளுருப் பெறும் உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையில் ஒருவருக்கொருவர் எதிராகச் செயற்பட்டு மற்றவரை அடக்குவதற்குப் பதிலாக அனைவருடனும் இணைந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புக்களை வளர்ப்பதன் மூலம் இருதரப்பும் எழுச்சி பெறுவதையே சீனா ஒருமித்த பொதுவான வளர்ச்சி என்பதன் மூலம் நடைமுறைப்படுத்த முயல்கிறது. இதனை சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் இன் மாநாட்டு உரையும் உறுதிப் படுத்தியுள்ளது. அவர் தமது உரையில் பிறருக்கு உதவி செய்பவர்க்கு அவருக்கும் நலன் கிட்டும் என்பதன் அடிப்படையிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அனைவருக்கும் பயனளிக்கும் முக்கிய முயற்சிகளைத் தொடங்குவதன் மூலம் இருதரப்பு வெற்றி இருதரப்பு ஒத்துழைப்பு ஆகியன பலம்பெற்று இருதரப்பும் தமது இலக்கை அடைவதற்கான வழியாக அமையும் எனத் தெரிவித்துள்ளமை சீனா தனது மேலாண்மையையும் உறுதிப்படுத்தி அதனை மற்றவர் செயற்கரிய செய்வதற்கான நட்பாக வெளிப்படுத்தும் என்கின்ற உறுதிமொழியையும் அளித்துள் ளார்.

அத்துடன் சீனாவின் தொன்மைச் சிந்தனையான பௌத்தம் எட்டு செயல் களை வாழ்வில் அமைதி பெறச் செய்ய வேண்டும் என்று வரையறுத்தது போல சீனாவின் பலம் வாய்ந்த தத்துவமான கொன்பியூசியசம் முதல் மாவோசியசம் வரையிலான சீன சிந்தனைகளின் வழி நின்று இன்றைய சீனாவின் உயர்தர மண்டலம் மற்றும் பாதை முன்னெடுப்பு முயற்சிக்கும் எட்டு கொள்கைப் பிரகடனங் களை வெளியிட்டுள்ளார்.

1. பல பரிமாண மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி இணைப்பு வலய மைப்பை உருவாக்குதல்.
2. பொருளாதாரத்தில் உலக மயமாக்கலின் திறந்த சந்தைப் பொறிமுறையை ஊக்குவித்தல்
3. பொருளாதாரத்தில் கொள்கை பேசுவதுடன் நில்லாது நடைமுறை ஒத்துழைப்பை அளித்தல்.
4. உலகின் பசுமை நிலையையும் வளர்ச்சியையும் பேணுதல்
5. அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் பெருக உதவுதல்
6. மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான பரிமாற்ற உறவுகளை இணைத்தல்
7. ஒருமைப்பாடு அடிப்படையிலான மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சிகளை ஊக்குவித்தல்
8. அனைத்துலக மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி ஒத்துழைப்புக்கான நிறுவனத் தன்மையான உறுதிப்படுத்தல்களை ஊக்குவித்தல்

இந்த கொள்கைப் பிரகடனத்தின் மூலம் சீனா தனது இணைப்பில் உள்ள 150 நாடுகளுடனும் அதனது உள்ளக வெளியகச் செயற்பாடுகள் அனைத்திலும் நெறிப்படுத்தல் சக்தியாக அல்லாது வளப்படுத்தல் ஆற்றலாகத் தன்னை நாடுகள் பயன்படுத்தும் உரிமையினை உறுதிப்படுத்தியுள்ளது. இதனால் சீனாவின் உயர்தர மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி என்பது புதிய உலக அரசியல் முறைமையில் எவ்வாறு அமெரிக்காவின் பிரிட்டன்வூட் கொள்கை உருவாக்கல் 1945 முதல் 2020 வரையான காலம் வரை உலகின் தலைமைத்துவத்தை முன்னெடுக்க அமெரிக்காவுக்கு உதவியதோ அதுபோல இன்றைய உலகின் புதிய அரசியல் முறைமைக்குச் சீனா தான் தலைமைத்துவத்தை முன்னெடுக்க உதவப்போகிறது. இன்றைய இந்தப் புதிய அரசியல் முறைமையில் இலங்கையைச் சீனா தனது கடல்வழி வான்வழி நிலவழி வளர்ச்சிக்கான முக்கிய இடமாக வலிந்து கொண்டது. சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி தன்னளவில் அமெரிக்க இந்திய ஆதரவு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டவராக இருப்பினும் அதனையும் மீறிச் சீனாவுடன் அதன் உயர்தர மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சிகளை முன்னெடுப்பதை ஏற்று ஊக்கப்படுத்தும் பத்து உடன்படிக்கைகளை உறுதிப்படுத்தியுள்ளார்.

01. சீனாவின் உயர்தர மண்டல மற்றும் பாதை முன்முயற்சித் திட்டங்களை இலங்கை அதனுடன் இணைந்து கூட்டாக விரைவாகச் செயற்படுத்தும் புரிந்துணர்வு உடன்படிக்கை

02. சீனாவின் தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணைக்குழுவுடனான அரசியல் தொடர்பாடல் மூலம் இலங்கையின் நிதி, பொருளாதாரம், தேசியக் கொள்கைள் என்பவற்றைச் சீனாவுக்கு அமைவாக முன்னெடுப்பதற்கான புரிந்து ணர்வு உடன்படிக்கை

03. இலங்கையிலும் கார்பன் வாயுக்கள் வெளியேற்றங்களை மட்டுப்படுத்தி பசுமை வளர்ச்சியைப் பேணும் புரிந்துணர்வு உடன்படிக்கை

04. கொழும்பில் 2000 அலகுகள் வீடுகளை அமைத்தலை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி உடன்படிக்கை

05. சீனாவுக்கு இலங்கை இலவங்கப்பட்டைகளை ஏற்றுமதி செய்வதில் உள்ள பைட்டோசனிட்டரி தேவைகளின் நெறிமுறைகள் குறித்த உடன்படிக்கை

06. இலங்கையில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் காட்டு வளப் பொருள்கள் மீன்பிடித்தல் வழியான சந்தைப்பொருட்கள், நீர்வாழ் உயிரினம் (கடலட்டைப் பண்ணை, இறால் போன்றவை) என்பவற்றின் அதிக உற் பத்திக்கான ஆய்வுகள் மற்றும் இவற்றை விளைவிப்பதற்காக நிலத்தை நீரை வழமையான பயன்பாடுகளில் இருந்து தனிமைப்படுத்தல், கூடவே கால் நடைகளின் சுகாதார தேவைகள் என்பன குறித்த நெறிமுறைகள் குறித்த உடன் படிக்கை

07. இலங்கையில் பொதுக்கல்வியை சீனாவின் டிஜிட்டல் வெளித் தொழில் நுட்பத்துடன் இணைத்து மாற்றுவதற்கான சீன உதவியைப் பெறுவதற்கான பரிமாற்ற உடன்படிக்கை

08. நீரை முதலாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தொழில்கள் தொடர்பான தொழில்நுட்ப சீன இலங்கைக் கூட்டு ஆய்வுகள் விளக்க மையங்கள் செயற் பாடுகள் குறித்த சீனா-ஆய்வு மையம்-இலங்கை அரசாங்கம் இடையிலான முத்தரப்பு உடன்படிக்கை

09. சீனாவின் ஹெனானில் உள்ள வரலாற்றுச் சிறப்புள்ள வெள்ளைக் குதிரைக் கோயிலில் இலங்கைக் கோயில் அமைத்து இலங்கை புத்த நாடென உலகுக்கு அறிவிக்கும் புத்த தூபியையும் நிறுவும் உடன்படிக்கை

10. கொழும்பு துறைமுக நகரின் 2வது கட்ட மேம்பாட்டு வேலையை தொடங்க சீனாவிடம் இருந்து 1565 பில்லியன் டொலர்களைப் பெறுவதற்கு துறைமுகப் பொருளாதார ஆணையகம், சைனா கார்பர் என்ஜினியரிங் கம்பெனி, பிறவுண் இன்வெட்ஸ்மென்ட் குரூப் ஹெனான் கன்ஸ்ரக்சன் இன்வெஸ்ட்மென்ட் குரூப் ஆகியவற்றுக்கு சீனாவும் இலங்கையும் அனுமதிக்கும் உடன்படிக்கை.

இந்தப் பத்துத் திட்டங்களையும் பொருளாதார கல்வி கட்டமைப்பு ஏற்றுமதி வளர்ச்சிகளுக்கென்றே இலங்கை கூறினாலும் இவை சிங்கள இறைமை தன்னை சீனாவின் அதிகாரமையத்துடன் இணைத்து இந்தியா மற்றும் அமெரிக்க அதிகார மையங்களின் இலங்கை மீதான அழுத்தங்களை எதிர்ப்பதற்கான தனது பலத்தைப் பெருக்குவதற்கான திட்டமிடல் என்பது சிறுகுழந்தைக்கும் தெளிவாகத் தெரியும். இலங்கையின் சிங்கள இனத்தின் இந்த தங்களின் இறைமையத் துணிவுடன் முன்னிறுத்திச் செயற்படும் பண்பு ஈழத்தமிழர்களுக்குத் தங்களின் இறைமையைத் துணிவுடன் முன்னிறுத்திச் செயற்படுவதில் 2009க்குப் பின்னர் இல்லாது இருப்பதுவே இலங்கையின் மூத்த குடிகளான ஈழத்தமிழர்கள் குறித்த அனைத்துலக அக்கறையின்மை தொடர்வதற்கான மூலகாரணமாக உள்ளது.

அவ்வாறே சிங்கள பௌத்த அரசியல்வாதிகளும் சிங்கள பௌத்த அமைப் புக்களும் ஒருவருக்கொருவர் எதிராகச் செயற்பட்டு மற்றவரை அடக்குவதற்குப் பதிலாக அனைவருடனும் இணைந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புக்களை வளர்ப்பதன் மூலம் எல்லாத் தரப்பும் எழுச்சி பெற்றுச் சிங்களத் தேசமாகத் தம்மை நிலைநிறுத்தும் தன்மை ஈழத்தமிழர்களுக்கு இல்லாமல் தமக்குள் முட்டி மோதிச் சகோதரப் பகைமைகளை வளர்த்து தேசமாக எழாது துண்டுகளாக நின்று கொண்டு தங்களுக்கு உலக ஆதரவு தேடவேண்டும் தங்களால் தாயகத்தைத் தேசியத்தைத் தன்னாட்சியை மீளுருவாக்கம் செய்ய முடியும் எனச் செயற்படும் படு முட்டாளிகளின் அரசியலால் ஈழதேச மீள் கட்டமைப்புக்கான உலகத் தமிழர்களின் கல்விப்பலத்தையோ தொழில்நுட்பத் துணையையோ பொருளாதாரத்திற்கான சமூக மூலதனத்தையோ கடந்த 14 ஆண்டுகளாக உருவாக்க இயலாது உள்ளது. இந்த தாயக புலத்து அரசியல்வாதிகளின் அமைப்புக்களின் ஒற்றுமையற்ற செயற்பாடுகள் ஒரு தேசத்தின் இறைமை அதன் மக்களின் ஒருமைப்பாட்டில் தங்கியுள்ளது என்ற உண்மையின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் இறைமை இழப்பாக மாறுகிறது. இதனால் வெளிநாடுகளில் வெளிநாட்டமைப்புக்களில் உரிமையுடன் தங்களின் வெளியகத் தன்னாட்சியின் அடிப்படையில் எங்களுக்கான தன்னாட்சியை அனுமதியுங்கள் என அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் கேட்க இயலாதவர்களாக ஈழத்தமிழரைத் தங்கி வாழும் மக்களாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

வெளிநாடுகள் அமைப்புக்கள் தங்களிடம் கோரிக்கை வைக்கும் தேசமக்களின் சமூக பொருளாதார அரசியல் ஆன்மீகப் பலத்தின் அடிப்படையிலேயே அவர்களின் தன்னாட்சிக்கான தங்களின் ஏற்பினையும் உதவிகளையும், வழங்குவார்கள் என்பதால் தாயகத்திலும் புலத்திலும் ஈழத்தமிழர்களின் ஒற்றுமையீனம் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினையில் அக்கறையற்றவர்களாக உலக நாடுகள் உலக அமைப்புக்கள் தம் நடவடிக்கைகளைச் சிறிலங்காவுக்கு ஆதரவாகவே வெளிப்படுத்துகின்றனர்.

இதனால் ஈழத்தமிழர்கள் 1978 முதல் 2009 வரையிருந்த தங்களின் நடைமுறையரசின் ஆட்சிப்பரப்பில் இருந்த இறைமையும் இழந்து அமெரிக்க இந்திய வல்லாண்மைகளால் சிறிலங்காவின் சமுதாயத்தினர் என்று பேசப்பட்டுச்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்





# தமிழீழ மாவீரர்களை உலகின் போற்றுதலுக்கு உரியவர்களாக்க உறுதி பூணுவோம்

**ஐ.வி. மகாசேனன்**



உலக அரசியலின் பார்வையில் மாவீரம்மற்றும் பயங்கரவாதத்துக்கான வேறு பாடுகளை சிறு இடைவெளியே நிரப்பீடு செய்கின்றது. அதாவது போராட்டத்தின் விளைவுகளே தீர்மானிக்கிறது. விளைவு வெற்றியாக அமைகையில் அவனை மாவீரனாக புகழந்து இணைந்து செல்வதிலும், மறுபக்கத்தில் தோல்வியடைந்தவன் மீது பயங்கரவாத முத்திரியை குற்றி அரசியலிலிருந்து தவிர்ப்பதுவே நீண்டகால உலக அரசியலின் மரபாக வெளிப் படுகின்றது. அம்மரபுக்குள்ளேயே தம் இனத்தின் தலைமுறை இருப்புக்காய் சாவை புன்னகையுடன் வரவேற்று சென்றவர்கள் மீதும் பயங்கரவாத முத்திரியை சர்வதேசம் குற்றியுள்ளது. எனினும் தமிழர் வாழும் தேசம் எல்லாம் இன்று மாவீரர் புகழ்வணக்கங்களால் கார்த்திகை மலர்வது மகிழ்வானது. எனினும் எமக்குள் எம்நாயகர்களை புகழாரம் சூடுவாற்கு அப்பால் சர்வதேசரீதியாகவும் அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதிசெய்வதே நாம் அவர்களுக்கு வழங்கும் உரிய புகழ் வணக்கமாக அமையும்.

பாலஸ்தீன விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்ட யசீர் அரபாத் மற்றும் அவரது பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனும் அமெரிக்கா 1993ஆம் ஆண்டு கைகுலுக்கியது. இதற்கு பின்னால் 1987-1993 காலப்பகுதியில் பாலஸ்தீன மக்கள் திரட்சியின் கிளர்ச்சியால் வலுப்பெற்ற மக்கள் சுதந்திரப்பேரணியின் அழுத் தங்களே காரணமாகியது.

**"மாவீரர் என்பர் யாரோ மரணத்தை வென்றவர்கள்" இதனை நீங்கள் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்கள்?**



தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களின் அறத்தை, அது சார்ந்த நியாயப்பாட்டை கருத்தியல் தளத்திலும், மக்கள் செயற்பாட்டிலும் வலுவாக பொதுவெளியில் முன்னிறுத்த வேண்டும். இன்று தமிழ் மக்களிடையே ஒரு தரப்பிடையே மாவீரம் பாரட்டப்படும் சமதளத்தில் அவர்களை பாசிசவாதிகளாக முன்னிறுத்தும் உரையாடல்களும் தாயகத்தில் காணப் படுவது மறுப் பதற்கில்லை. அவ்வாறான கருத்தாடல்கள் களையப்பட வேண்டும். சந்ததி கடந்து மாவீரர்கள் மாவீரம் கடத்தப்பட வேண்டும். நினைவேந்தல்களில் தீபங்களை ஏற்றி விட்டு கடந்து செல்லாது நினைவேந்தலுக்கான தார்ப்பரியத்தைகடத்த வேண்டும். 1980களுக்கு முன்னர் எவ்வாறான பின்னணியில் விடுதலைக்காக ஆயுதமேந்தினார்கள் என்பதை உரத்து சொல்ல கடமைப்பட்டுள் ளோம்.

**சபாரட்ணம் சிவயோகநாதன் (மட்டக்களப்பு)**

மாவீரர்கள் என்பவர்கள் பயங்கரவாதிகள் என்ற முத்திரை சர்வதேச வல்லரசுகளால் தங்களுடைய சுயநல தேவைகளுக்காக குற்றம்சாட்டப்பட்டு தடைசெய்தார்கள். பூகோள மற்றும் பொருளாதார நலன் சார்ந்து ஈழத்தமிழர்களின் விடுதலை வேட்கையை நசுக்கி தமிழர்களின் காவரண்களாக விளங்கிய விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகளாகச் சித்தரித்து தடைப் பட்டியலிட்டுள்ளார்கள்.

**"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும்' என்னும் வள்ளுவ வாக்கின் உதாரணங்கள் மாவீரர்கள். இவர்களை உலக நாடுகள் பல பயங்கரவாதிகள் பட்டியலில் வைத்திருப்பதை மாற்ற உலகத் தமிழர் முயலாது வெறுமனே மாவீரர் நாள் கொண்டாடுவதை எப்படி மாற்றலாம்?**

அரசியலில் இந்த மாவீரர்களை புனிதமானவர்களை போராட்ட மூலமாக இழந்ததன் விளைவு அந்த நாட்டு பாலஸ்தீனிய மக்களை பயங்கரவாதிகளாக இன்று யூதர்களும் அவர்களுக்கு ஆதரவுகொடுக்கும் நாடுகளும் அழைத்துக் கொண்டிருப்பது போல் தான் ஈழத்திரு நாட்டினுடைய சொந்தக்காரனாக ஈழத்தமிழரையும் இவர்கள் பயங்கரவாத முத்திரை குத்தியது மட்டுமல்லாமல் சர்வதேசமே இணைந்து எம்மை அரசியல் அனாதைகளாக ஆக்க முயற்சிக்கின்றது.

**மாவீரர் குடும்பங்கள் வாழ உதவாது மாவீரர் நாளைக் கொண்டாடுவதை எவ்வாறு மாற்றலாம்?**



காலங்காலமாக சிங்களவர்களால் இன அழிப்பிற்கு உள்ளான ஒரு தேசியத்தின் விடிவிற்காய் தமது இன்னுயிர்களை ஈய்ந்து போராடிய எம் விடுதலை இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்துக்கொண்டு ஐ.நா போன்ற மனித உரிமை மன்றங்கள் தொடர்ந்தும்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

**தமிழீழ மாவீரர்... தொடர்ச்சி ...**

கபட நாடகம் ஆடிவருகின்றது. சர்வதேச சமூகத்தின் நீலிக்கண்ணீரில் மயங்காது நாம் துணிவுடன் தொடர்ந்து போராடி விடுதலை இயக்கத்தின் தடையை நீக்குவதற்கான வழிவகை செய்யவேண்டும்.



எமது கண் முன்னே மாவீரரைப் பெற்றவர் களும் உறவினர்களும் தெருக்களில் நின்று போராடி வருகின்றனர். பல போராளிக்குடும்பங்கள் அன்றாட உணவிற்கே அல்லல்படுகின்றனர். அதுபோக அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கும் கீழ்த்தரமான செயல்களும் நடைபெறுகின்றது. இவற்றிற்கு ஒரு சரியான தீர்வு காணப்படாமல் பல இலட்சங்களைச் செலவுசெய்து நினைவு தினங்களும் சம்பிரதாயங்களும் உலகெலாம் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறுகின்றது. எமது அடுத்த தலைமுறைக்கு எமது போராட்ட வரலாற்றை கடத்த வேண்டுமாயின் இப்படியான சடங்குகள் செய்யத்தான் வேண்டும். அதே நேரத்தில் வலிமையாக போராடியவர்கள் நலிந்து போன காலத்தில் அவர்களுக்கான நல்வாழ்க்கையையும் அமைத்துக்கொடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

## திருச்சோதி திருகுலசிங்கம்

**உலக ஒழுங்கும் பயங்கரவாதமும்.**

நாம் வருடா வருடம் எமது மாவீரர்கள் அவர்கள் தியாகத்தை முன் னிறுத்தி நினைவுகூறுகிறோம், உலகம் அவர்களை பயங்கரவாதிகள் என்று கூறிக்கொண்டு இருக்கிறது.

உலகம் எவ்வாறு பயங்கரவாதத்தை நிர்ணயிக்கின்றது - 2009 மாபெரும் அழிப்புடன் முடிந்த எமது விடுதலைக்கான தியாகங்களுடன் ஆனா போராட்டம் பயங்கராவாதுக்கு எதிரான வெற்றி என்று உலகம் கூறியது.

இன்றும் போர் இல்லாத சூழலிலும் பயங்கரவாதம் என்ற அடையாளம் இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது, அதற்கான காரணம் என்ன என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.



இந்த உலக சூழலை நாம் ஆழமாக பார்த்தல், ஒரு சில வல்லரசுகள் , காலனித்துவ காலத்தில் உலக நாடுகளில் பெரும்பாலான பகுதியை தமது ஆளுமைக்குள் வைந்திருந்தவர்கள், காலனித்துவ காலத்தின் பின்பு தமது புவியில் ஆளுமையை தொடர்ச்சியாக வைத்திருக்க விரும்புகிறார்கள்.

அதனால் தான் நெல்சன் மண்டேலா பயங்கரவாதி ஆனார், யஸீர் அரபாத் பயங்கரவாதி ஆனார், இன்றும் குர்திஸ்தான் விடுதலை அமைப்புக்கள் ஆக இருக்கிறார்கள்.

தலிபான்கள் வல்லரசுகளின் நலனுக்காக உருவாக்கப்பட்டவர்கள், ஹமாஸ் - பலஸ்தீன விடுதலை அமைப்பை பலவீன படுத்த உரு வாக்கப்பட்ட அம்மைப்பு என்பதை ஆய்வுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உலக வல்லரசுகளின் தேவை கருதி நல்ல மக்கள், தேவையின் போது நாலவர்கள் ஆக கருதப்படுகிறார்கள், அத்தேவை முடிந்த பின் அதே நலன்கள் மாறும் போது பயங்கரவாதிகள் ஆக்கப்படுகிறார்கள்.

அரசுகளின் புவியில் அரசியலில் மக்கள் தியாகம் செய்யப்படுகிறார்கள், அதை காண்கூடாக நாம் பார்த்து வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

இன்று உலகத்தில் வாழும் பல கோடி தமிழ் மக்கள் எமது போராட்டத்தையும் மாவீரர்களையும் - அவர்களின் தியாகத்தை நினைத்து - தமிழை காக்க பிறந்த வீரர்கள் என்று வணங்குகிறார்கள்.

2009 போரின் பின் பல பத்திரிகையாளர்கள் - உலக பொருளாதார - புவியில் ஆக்கிரமிப்புக்காக இலங்கையில் தமிழர்கள் உயிர்பலி அல்லது தியாகம் செய்யப்பட்டார்கள் என்று எழுதியிருந்தீர்கள்.

இந்த வல்லரசு நடாத்தும் போரில் தொடர்ச்சியாக பாதிக்கப்படுபவர்கள் - அழிக் கப்படுபவர்கள் - மக்கள் மட்டுமே.



நாம் பல சவாலுக்குள் தொடர்ந்து போராடிக் கொண்டு இருக்கிறோம் - காரணம் நாம் பயங்கரவாதம் செய்யவில்லை - தொடர்ச்சியாக அழிக்கப்படும் இனத்ததை பாதுகாக்க - யாரும் எங்களை பாதுகாக்க முன் வராத சூழலில் - எம்மை - எம் மண்ணை பாதுகாக்க ஆயுதம் தூக்கியவர்கள்.

அவர்கள் ஆயுத போராட்டத்தை நிறுத்தி - உலக மக்களிடம் கடமையை கொண்டது விட்டு தம்மை மண்ணுக்குள் வித்தாகி போனார்கள். எமது கடமை - உலக சூழலை வைத்து - தொடர்வது.

## மோகனதாசன் வினாசித்தம்பி

விடுதலைப்புலிகளைப் பயங்கவாதப் பட்டியலில் வைத்திருப்பதோ அவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பதோ விடுதலைப்புலிகளை நிராகரிப்பதற்கல்ல; அவர்கள் தலைமையேற்று நின்று வழிப்படுத்தியதமிழர்களின்நியாயமானபோராட்டத்தை நிராகரிப்பதற்காகத் தான்! இந்தப் பொறிக்குள் மாட்டுப்பட்டுள்ள நாம், விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கினால்தான் எமது போராட்டத்தை 36528சர்வதேச நாடுகள் அங்கிகரிக்கும் என்று அசட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்றோம். பலஸ்தீனத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சனநாய முறையில வெற்றி பெற்ற ஹமாஸ் இயக்கத்தை மேற்குலகம் நிராகரித்தது. இன்று ஹமாஸ் இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளை செய்யவேண்டிய கையறு நிலைக்கு வந்ததற்கு யார் பொறுப்பு? பயங்கரவாதத்தை உருவாக்கி முத்திரை குத்தி நியாயமான போராட்டங்களை நிராகரிப்பதையே ஒரு கோட்பாடாக வல்லரசுகள் இன்று செய்து வருகின்றனவா? என்ற கேள்வியும் எழுகின்றது!

நீங்கள் வன்முறையை விரும்பவில்லை என்றாலும் உங்கள் கையில் ஆயுதங்களை திணித்து பயங்கவாத நடவடிக்கையில் ஈடுபடவைத்து, உங்களை அழித்தொழிப்பதற்கான வாய்ப்பினை அவர்கள் உருவாக்கி விடுவார்கள்.

அரசுகளின் பயங்கரவாதத்திற்கு அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்ட உரிமை இருப்பதாக கண்டுகொள்ளப் படுவதில்லை. நடந்து கொண்டிருக்கும் ஹமாஸ்- இஸ்ரேல் மோதுகை, எதார்த்தம் எது வென்பதை நாம் தெட்டத்தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

பயங்கவாத முத்திரை குத்தும் நாடுகளின் நியாயம் சொல்லும் தகைமைகளும் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவர்களே தலை குனிய வேண்டியதாக இருக்கும்.

விடுதலைப் போராட்டங்களை தலைமை ஏற்று நடத்திய இயக்கங்களும் தலைவர்களும் ஒரு காலகட்டத்தில் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டவர்கள் தான். தென்னாபிரிக்க நெல்சன் மண்டேலா, பிரான்சு சார்ல்து கோல், கியூபா பிடெல் கஸ்ரோ... இந்தப் பட்டியல் நீளும். ஆனால் அவர்களின் விடுதலைப் போராட்டங்களின் வெற்றிகளே அவர்களை விடுதலை செய்தன. மக்கள் திரள் அரசியலை பலப்படுத்தவேண்டும். ஒன்றுபட்ட மக்களின் சனநாயகப் போராட்டங்கள் வழி எமக்கான நீதியையும் விடுதலையையும் நாம் பெற்றாக வேண்டும்

## குமணன் கணபதிப்பிள்ளை - முல்லைத்தீவு

மாவீரர்கள் ஒரு உன்னத இலட்சியத்துக்காக விதையானவர்கள். ஒவ்வொரு உயிரினங்களுக்கும் மரணம் என்பது நிச்சயிக்கப்பட்டது ஆனால் அந்த மரணத்தை மானிடவிடுதலைக்காக தங்களை அர்ப்பணித்து ஒப்பற்ற தியாகத்தை செய்து வென்றவர்கள் மாவீரர்கள் .

மாவீரர் நாள் ஒவ்வொரு வருடமும் நினைவேந்தப்பட்டு வருகிறது. ஆனால் வெறு மனவே அதை ஒரு நினைவேந்தலாக மட்டும் கடந்துவிடுகிறோம். அந்த நினைவேந்தலின் கூட்டு அரசியலை நாங்கள் வெளிப்படையாக இந்த உலகத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.



எமது இனம் அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்கத்துக்காக மடித்தவர்களே மாவீரர்கள் ஆனால் அவர்களது இலட்சியம் இன்னும் அடையப் படவில்லை எமது இனத்தின் மீதான அடக்குமுறை இன அழிப்பு தொடர்ந்து வபிருகிறது. ஆகவே நீதிக்காகவும் விசுதலைக்காகவும் போராடும் இனமாக நாங்கள் மாவீரர்களை எமது விடுதலைக்காக போராடியவர்கள் என்ற உண்மையை உலகின் முன் வெளிப்படுத்த வேண்டும். அவர்களது சாவு வெறும் சாவு அல்ல அது ஒரு இனத்தின் விடுதலை வேட்கை என்பதை தெளிவுபடுத்தி நாம் செயலாற்ற வேண்டும்.

மேலும் ஒவ்வொரு வருடமும் மாவீரர் நாளினை பெருமெடுப்பில் செய்யும் நாம் அதனை அந்த நாளோடு கடந்து விட்டு வேறு வேலைகளுக்கு சென்று விடுகிறோம் ஆனால் அந்த மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் அவர்தம் குடும்பங்கள் படும் துன்பங்களை போக்க ஒரு பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும்.

வெறுமனவே உதிரி உதிரியாக உதவிகளை வழங்குவதற்கு மாறாக அவர்களின் நிலையான வாழ்வுக்கு ஏற்ற திட்டங்களை முன்னெடுக்க முதலில் நாம் ஒற்றுமை படவேண்டும் கூட்டு முன்னெடுப்பை மேற்கொள்ளவேண்டும். இது எங்கள் முன் இருக்கின்ற அவசியமானதும் மகத்தானதுமான பணி .

• • •

# நிர்மலா சீதாராமன் விஜயம்



# சொல்லியிருக்கும் செய்தி?!

அகிலன்

குறுகிய கால முன்னறிவிப்புடன் கொழும்பு வந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னை ஊடாக இந்தியா திரும்பியுள்ளார். இந்திய அமைச்சருடைய விஜயத்துக்கான ஏற்பாடுகள் நீண்ட நாட்களுக்கு முன்னரே செய்யப்பட்டிருந்தாலும் கூட, ஒரு சில தினங்களுக்கு முன்னர்தான் அது பகிரங்கமாக வெளியிடப்பட்டது.



நிர்மலா சீதாராமன் இந்திய அரசாங்கத்தின் ஒரு சக்திவாய்ந்த அமைச்சர். பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர். இவற்றைவிட இந்தியாவின் நிதி அமைச்சர் என்ற முறையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து தீர்மானங்களை எடுப்பதில் முக்கிய பங்களிப்பைச் செலுத்தியவர். அவரது இலங்கை விஜயம் முக்கியமானதாக நோக்கப்பட்டமைக்கு இற்றைவிட மற்றொரு காரணமும் இருக்கின்றது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கை விஜயம் "காரணம் சொல்லப் படாமல்" ஒத்திவைக்கப்பட்ட பின்னணியில்தான், இந்திய நிதி அமைச்சரின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்பட்டது. செப்ரெம்பர் 2 ஆம் திகதி ராஜ்நாத் சிங் கொழும்பு வருவார் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு முதல்நாள் இரவுதான் அவரது விஜயம் ஒத்திவைக் கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

### சீனக் கப்பல் சர்ச்சை

அவர் தனது இலங்கை பயணத்தை திடீரென ஒத்திவைத்திருப்பது ஆய்வாளர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி ஊகங்களை கிளப்பி யுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர முறுகல்தான் இந்த திடீர் ஒத்தி வைப்புக்கு காரணமாகச் சொல்லப்பட்டது. உத்தியோகபூர்வ காரணம் எதுவும் வெளியிடப் படவில்லை. என்றாலும், சீன கப்பல் சர்ச்சைதான் இதற்கு வழிவகுத்தது.

சீன ஆய்வுக் கப்பலை 'உளவு கப்பல்' என்றும், இந்தியாவின் பாதுகாப்புக்கு கேடு விளைவிப்பதாகவும், இந்தியா கவலை தெரிவித் துள்ளது. விஜயத்தை ஒத்திவைப்பதன் மூலம், சீனக் கப்பலை இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதித்ததற்காக கொழும்பிற்கு தனது அதிருப்தியை சூட்சுமமாக இந்தியா வெளிப் படுத்தியது. இந்த நிலையில், இந்திய நிதி அமைச் சரின் விஜயம் முக்கியமானதாக நோக்கப்பட்டது.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமனின் இலங்கைப் பயணம் இருதரப்பு உறவு களுக்கு மட்டுமின்றி, தமிழர்களுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "நாம் 200" என்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார். தென்னிந்தியாவிலிருந்து மலையகத் தமிழர்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 200 ஆண்டுகளை நினைவு கூரும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

### பொருளாதார உதவிகள்

இலங்கை கடுமையான கடன் நெருக்கடி உட்பட பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடியின் போது 4 பில்லியன் டொலருக்கும் அதிகமான இந்தியாவின் நிதி உதவி, அதன் அண்டை நாடுகளுக்கு ஆதர வளிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை வெளிப் படுத்தியது. நெருக்கடியிலிருந்து இலங்கை மீள் வதற்கு இந்தியாவின் உதவி பெருமளவுக்குக் கைகொடுத்தது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார மீட்சி குறித்த அமைச்சர் நிர்மலா சீதாராமனின் உரைகள் முக்கியமானவை. சர்வதேச நாணய நிதியத்திற்கு (IMF) நிதி உத்தரவாதத்தை வழங்கும் முதல் இருதரப்பு கடன் வழங்குநராக இந்தியாவின் பங்கு மற்றய நாடுகளும் பின்பற்ற வழி வகுத்தது. அந்த வகையில் இந்தியாவின் நிதி அமைச்சர் என்ற முறையில் மட்டுமன்றி, ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலும் நிர்மலா சீதாராமனின் விஜயம் முக்கியத்துவம் பெற்றது.

### மகாசங்கத்துடன் சந்திப்பு

இலங்கைக்கான தனது விஜயத்தின் போது, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இலங்கை அரசியலில் அதிகளவுக்கு செல்வாக்கை செலுத்தும் மகாசங்கத்தினரையும் கண்டிக்குச் சென்று சந்தித்து பேசினார். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான வரலாற்று மற்றும் கலாச்சார உறவுகளை இதன்போது அவர் வலியுறுத் தினார்.



சிங்கள–பௌத்த மக்கள் மத்தியில் இந்தியா குறித்த நல்லுணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் புதுடில்லிக்குள்ள அக்கறையை இந்த சந்திப்பு உறுதிப்படுத்தியது. மகாசங்கத்தினரைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமாகத்தான் இதனை சாத்தியமாக்கலாம் என புதுடில்லி கணக்குப் போட்டுள்ளது.

அதேவேளையில், இலங்கையில் பௌத்த மதத்தை மேம்படுத்துவதற்காக 107 கோடி ரூபாவை இந்தியா வழங்கவுள்ளது. இது தொடர்பான தகவல்களையும் பௌத்த மகா சங்கத்தினருக்கு இந்திய நிதி அமைச்சர் தெரியப்படுத்தினார். பொருளாதார நெருக்கடியின்போதும், தற்போது பௌத்தத்தை வளர்ப்பதற்காக இந்தியா வழங்கும் நிதி உதவிகளுக்கு மகாசங்கத்தினர் தமது நன்றிகளைத் தெரிவித்தார்கள்.

### வடக்கு கிழக்கில்

எவ்வாறாயினும், இந்திய அமைச்சரின் உரை யாடல்களில் குறிப்பாக வடக்கு-கிழக்கு தமிழ்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சுமந்திரன் இதனைத்தான் சொல்லியிருக்க வேண்டும்



**தமிழ் அரசியல் பரப்பில் பரபரப்பான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது. சம்பந்தனை பதவி துறக்குமாறு சுமந்திரன் வலியுறுத்தியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்தலாம் என தமிழ்க் சில கட்சிகள் ஆலோசித்து வருகின்றன. இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை வந்துள்ளார். இவை தொடர்பாக வடமாகாண முன்னாள் அமைச்சரும் அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**கந்தையா சர்வேஸ்வரன்** செவ்வி

**தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் என வர்ணிக்கப்படும் சம்பந்தன் அவர்கள் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும் என அக்கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் பொது வெளியில் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இது குறித்து உங்களுடைய பார்வை என்ன?**

பொது வெளியில் என்று கூறுகின்றபோது. சக்தி *TV News 1st* எனும் ஆங்கில ஊடகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் திரு.சுமந்திரனுக்கு அப்பால், *JVP* சார்ந்த ஒரு பெண்மணியும் . சஜித் பிரேமதாச கட்சி சார்ந்து எரான். விக்கிரமசிங்க போன்ற நான்கு பேர் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த ஊழல் என்ற தலைப்பில் பேசுகின்ற போதுதான் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

திரு சம்பந்தன் அவர்கள் இந்த ஆண்டில் பாராளுமன்றத்தில் எத்தனை கூட்டம் நடைபெற்று இருக்கின்றது. அதில் எத்தனை கூட்டத்தில் பங்கு பற்றி இருக்கிறார்? என்று கேள்வி கேட்கப்பட்டது. அதில் அவருக்கு எவ்வளவு சம்பளம் சென்று இருக்கிறது என குறிப்பிடப்பட்டது.

அதில் திரு. சம்பந்தன் அவர்களை ஒரு ஊழல் ஆளாக காட்டப்பட்டது. காரணம் நாடாளு மன்றத்தில் வழங்கப்படுகின்ற சம்பளம் ஒரு ஊழல் என்ற வகைக்குள் உள்ளடங்காது.

உங்களுக்கு தெரியும் அரச உத்தியோகத்தில் இருக்க கூடியவர்கள் பல்வேறு காரணங்களால் மூன்று மாதம் அல்லது ஆறுமாதம் என விடுமுறைகள் எடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் வரும் போது அந்தக் காலத்தில் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

அதேபோன்று பாராளுமன்றத்தில் கூட 225 நபர்களுக்கு மேல் குறிப்பிட்ட ஒரு சம்பளமும் அதற்கு மேல் ஒரு அளவு அம்சங்களும் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் கூட அனைத்து பாராளுமன்ற தொடர்களில் பங்குபற்றுபவர்கள் இல்லை. அதேபோல் முக்கியமானவாக்கெடுப்பில் கூட கலந்து கொள்ளாத சந்தர்ப்பங்கள் உள்ளது. ஆகவே இந்த மக்கள் பிரதி நிதிகளுக்கான ஊதியம் என்பதும், சலுகைகள் என்பதும் அவர்கள் போகாத சந்தர்ப்பங்களில் அது ஊழல் என்ற என்பதற்குள் அடங்காது.

சட்டத்தை படித்த, ஜனாதிபதி சட்டத்தரணியாக இருக்கக் கூடிய இந்த சுமந்திரன் இந்த கேள்வியை நிராகரித்து இருக்க வேண்டும் அல்லது ஊழல் என்ற இந்த கேள்விக்குள் உள்ளடங்காது என்று நிராகரித்து இருக்க வேண்டும். மாறாக அவர் அந்த கேள்விகளை ஏற்றுக்கொண்டு அவர் கூறிய பதில்கள் எல்லாம் ஊழலுக்குள் உள்ளடங்கும் என்பதை அவர் ஏற்று கொண்டதாகவும். சம்பந்தன் ஊழல் செய்வதாகவும் தான் அது கணிக்கப்படுகிறது.

இது முதலாவது மிகப்பெரிய தவறு. இரண்டாவது விடயம் நான் சம்பந்தன் அவர்களை இதற்கு முன்பு பதவி விலக சொல்லி இருந்தேன் என்பதும் இனியும் அதை சொல்வேன் என கூறி இருப்பதும். சம்பந்தன் அவர்கள் பதவி விலக வேண்டுமா? விலகக் கூடாதா? என்பதும் கட்சிக்கு உள்ளே பேசி தீர்மானிக்க வேண்டிய விடயங்கள். சட்டம் படித்த ஒருவருக்கு கட்சியின் சட்டக் கோவை பற்றி தெரிந்து இருக்க வேண்டும். கட்சியின் கட்டுப்பாடுகள் என்றால் என்ன? கட்சியின் சட்டக் கோவை என்ன சொல்கிறது? என அறிந்திருக்க வேண்டும்.

ஆகவே எதை கட்சிக்குள் பேசவேண்டும், எதனை பொது வெளியில் பேசவேண்டும் என்று தெரிந்து கொள்ளாத ஒருவராகவும், அவர் கட்சியில் வகிக்கும் பெரிய பதவிக்கு கேலிக் கூத்தாகவும், சிறுபிள்ளைத்தனமாக இருப்பதாகவே நான் பார்க்கின்றேன்.

அந்த வகையில் திரு.சம்பந்தன் அவர்கள் பாராளுமன்றத்திற்கு போவதில் சில விடயம் இருக்கலாம். சம்பந்தன் அவர்களின் வயது,தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதனை வழிநடத்தி சென்றது என எங்களுக்கும் விமர்சனம் உள்ளது. ஆனால் சம்பந்தன் அவர்கள் இன்றைக்கும் எங்களை பொறுத்தவரையில் அவர் தமிழ் அடையாளமாகத் தான் இருந்து கொண்டிருக்கின்றார்.

பல்வேறுபட்ட நாட்டின் இராஜ தந்திரிகள் கூட்டாக சந்திக்கிறார்கள். அதேபோன்று நேற்று முன்தினம் கூட ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதிகள் கூட வந்து அவரைத்தான் சந்தித்தார்கள். ஆகவே தமிழ் மக்களுடைய பிரச்சனை தொடர்பாகவோ அல்லது அரசாங்கத்தின் மாற்று கருத்து சார்ந்து நாட்டின் உடைய பிரச்சனைகளை பேசக் கூடியவராக அவர் இருக்கிறார். அவரிடம் தான் அவர்கள் போய்பேசுகிறார்கள்.

இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம் அவர் தனது தொகுதிக்கு செல்லவில்லை என்று குற்றச்சாட்டு உள்ளது. அவர் தனது தொகுதிக்கு செல்லா விட்டாலும் கூட அவர் சில தொடர்பாடல் ஊடாக பிரச்சனைகளை கையாளுவதை நாங்கள் அறிகிறோம்.

குறிப்பாக திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பாதை ஓரம் நீளத்திற்கும் சிங்களவர்கள் தற்காலிக கடையமைத்து அதனை நிரந்தர கடைகளாக்குவதற்கு முயன்றபோது அதனை கடிதங்கள் ஊடாக அனுப்பி தடுத்து நிறுத்தி இருக்கிறார். இதுபோன்ற சில விடையங்களை அவர் செய்து கொண்டே இருக்கிறார். ஆகவே தன்னால் இயன்ற கடமைகளை செய்து கொண்டிருக்கிறார் என்பது.

இரண்டாவது விடயம் சர்வதேச இராஜ தந்திரிகள்வருகின்றபோதுஅவர்களைசந்திக்கிறார். ஆகவே அவர் சரியாக தனது கடமைகளை செய்ய முடியவில்லை என்பதும் அவர் பதவி விலக வேண்டும் என்பது சரியாக தெரியவில்லை. இந்த விடயம் பொறுத்தவரையில் கட்சிக்குள்ளே பேசி முடிவு எடுக்க வேண்டிய விடயங்கள். ஆகவே இதனை பொது வெளியில் பேசுவது என்பது ஒரு கட்சியை பலவீனப்படுத்துகின்ற, ஒரு கட்சியின் கட்டுப்பாடு தெரியாத ஒரு தவறான நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன்.

**இந்திய நிதி அமைச்சர் குறுகிய கால முன்னறிவித்தல் ஒன்றுடன் இலங்கை வந்திருக்கின்றார். கொழும்பு, திருமலை, யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப் பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்கின்றர். அவரது விஜயத்தின் அரசியல் முக்கியத்துவம் என்ன?**

அவருடைய பிரதான நோக்கம் நான் அறிந்தவகையில் நாம் 200 என்ற மலையக மக்கள் இந்த நாட்டிற்குள் வந்து 200 ஆண்டுகள் அதன் சார்ந்த ஒரு நிகழ்ச்சியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சுகததாச அரங்கில் இன்று நடத்துகின்றது. அந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக அவர் பங்கு கொண்டிருக்கிறார். அது ஒரு கோணம் அதில் இருக்க கூடிய முக்கியத்துவம் என்பது உங்களோடு இந்தியா இருக்கிறது என்று காட்டுவது. அது ஒரு முக்கியமான விடையமாக நான் பாற்கின்றேன் .

அவர் இந்தியாவின் நிதி அமைச்சர் அவர் இந்தியாஇருந்துவருகின்றபோதுதிருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இந்தியாவினுடைய வங்கிகள் திறப்பதற்கும். இந்திய நிதியில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட கலாச்சார மண்டபத்தை பார்வையிடவும் நீங்கள் கூறியது போன்று அவருடைய வருகை அந்த குறுகிய காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஒன்று.

ஆகவே ஏனைய அவரது நிகழ்சியை பொறுத்தவரையில். மலையக மக்களுக்கு ஆதரவாக நாங்கள் இருக்கிறோம் என்ற செய்தியை அது காட்டுகின்றது. அதேபோன்று பொருளாதார நெருக்கடியில் இரண்டு வங்கிகளை திறப்பது என்றும் அமைந்திருக்கின்றது என்றுதான் நான் அந்த விடயத்தைப் பார்க்கிறேன்

**இந்திய மீனவர்களுடைய ஊடுருவல் என்பது வடபகுதி கடற்றொழிலாளர்களை வெகுவாகப் பாதிக்கின்றது. இது தொடர்பில் தமிழ்ப் பிரதிநிதிகள் ஆரோக்கியமாக எதனையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்றுள்ளது. இதற்கு உங்கள் பதில் என்ன?**

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# யாழ் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளை குழப்ப மேற்கொள்ளப்படும் சதி

**சுகாஸ்** ஊடகப் பேச்சாளர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

தமிழர்தேசமான வடக்கு கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்களுடைய அடையாளங்களை அழிப்பதிலும் அகற்றுவதிலும் சிங்கள பௌத்த பேரினவாதம் சுதந்திரம் முதல் கண்ணும் கருத்துமாக இருப்பதை நீங்கள் தொடர்ச்சியாக அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அதனுடைய மற்றுமொரு வெளிப்பாடாகத் தான் நாங்கள் இந்த விடயத்தைப் பார்க்கின்றோம்.



யாழ் பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை சட்ட விரோதமாக எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல் அகற்றியிருந்தார்கள். அதற்கு எதிராக தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் முன்னாள் மாணவர்களும் பொது அமைப்புகளும் சிவில் அமைப்புகளும் பாரியதொரு எதிர்ப்புகளையும் எதிர்வினைகளையும் காட்டி உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடிய அளவுக்கு நிலைமை தீவிரம் பெற்றதாலும் அந்த விடயத்துக்கு அனுமதி வழங்கிய யாழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக அந்த நேரமும் இப்போதும் இருந்த இருக்கின்ற சிறிசற்குணராஜா அவர்களுக்கு எதிராக ஒரு பாரிய களங்கமாகவும் காணப்பட்ட காரணத்தினால் அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ அதனை மீளவும் அந்த இடத்திலே நிர்மாணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்கள்.

தற்பொழுது யாழ் பல்கலைக்கழகத்தினுடைய ஒரு விரிவுரையாளரும் இரண்டு பொது மகன்களும் மேற்கொண்ட ஒரு முறைப்பாட்டினை அடுத்து மீண்டும் இந்த விடயம் கிளறப்படுவதாக அறிகின்றோம். உண்மையில் அவர்கள் தாங்களாக அந்த முறைப்பாட்டை வழங்கினார்களா அல்லது அந்த முறைப் பாட்டை வழங்குவதற்கு வேறு நபர்கள் தூண்டுதலாக இருந்தார்களா என்பதெல்லாம் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் வெளிச்சம்.



ஆனால் ஒரு விடயம் மிகத் தெளிவாகின்றது, தமிழ்த் தேசத்தில் இருக்கின்ற இனத்துவ தனித்துவங்களை அழிப்பதில் சிங்கள பௌத்த பேரினவாதமும் அவர்களுக்கு சாமரம் வீசுகின்ற ஒரு சில தமிழ்த் தரப்புகளும் அதிகார வர்க்கத்தினரும் துணை போவதை நாங்கள் காண முடிகின்றது. இது தமிழ் மக்களுக்கு சிக்கலான இக்கட்டான ஒரு நிலைமையைத் தான் தோற்றுவித்திருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும்.

யாழ் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத் தூபி என்பது ஒரு உலகளாவிய அங்கீகாரம் பெறத் தக்க வகையிலே அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தூபி அகற்றப்படுமாக இருந்தால் எதிர்காலத்திலே தமிழ் மக்களுடைய அபிலாசைகளை அடைவதற்கான அந்தப் படியிலே வீழ்ச்சியைக் கொண்டு வரும் என்பது எங்களுடைய ஒரு கணிப்பாகக் காணப்படுகின்றது. ஆகவே இதற்கு நாங்கள் அனுமதிக்கக் கூடாது. யாழ்பல்கலைக் கழக மாணவர்கள் மட்டுமல்லாமல் யாழ் பல்கலைக் கழகத்திலே பேராசிரியர்களாக விரிவுரையாளர்களாக ஏன் துணைவேந்தராக இருப்பவர் கூட இந்த விடயத்தில் தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்காக துணிந்து குரல் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கோரி நிற்கின்றோம்.

அனைவரும் இதற்கெதிராக களத்திலே இருக்கின்ற தமிழர்களும் புலம்பெயர் தமிழர் களும் புத்தி ஜீவிகளும் தொடந்தும் குரல் கொடுக்கின்ற பட்சத்தில் இதனை நாங்கள் எடுக்காமல் தொடர்ந்தும் வைத்திருக்க முடியுமென்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் கேட்டது போல இதனை மாவீரர் வாரத்தோடு மட்டும் சுருங்கிய ஒரு நிகழ்வாக நான் பார்க்கவில்லை. இது மாவீரர் நாளையும் கடந்து தமிழ்த் தேசிய நீக்கத்தையும் அதனுடைய அடையாளத்தையும் இந்த மண்ணிலிருந்து நீக்குகின்ற கட்டமைக் கப்பட்ட இனவழிப்பின் ஒரு பாகமாகத் தான் இந்த விடயத்தை நாங்கள் பார்க்கின்றோம். அதற்குள் மாவீரர்வார நிகழ்ச்சிகளை குழப்புகின்ற நிகழ்ச்சி நிரலும் அடங்கியிருக்கலாம்.

• • •

**சீனாவின் ... தொடர்ச்சி ...**

சிறிலங்காவுக்குள் அடக்கப்பட்டு அது வழங்கும் சிங்கள பௌத்த மேலாண்மைத் தீர்வு களுக்கு அதனுடன் பேச்சுவார்த்தைக்குத் தவமிருக்கும் சிறுமைத்தனமான அரசியலை முன்னெடுக்கும் நடைமுறை எதார்த்தத்தில் உள்ளனர்.

இதற்கான முழுப்பொறுப்பையும் தங்களுக்குள் ஒற்றுமை ஒருமைப்பாடு இல்லாது ஈழத்தமிழர்களுக்காகத் தாயகத்திலும் புலத்திலும் உலகெங்கும் ஈழத்தமிழர் தொடர்பாக அரசியல் பேசும் அத்தனை பேரும் ஏற்றேயாக வேண்டியவர்களாக உள்ளனர் என்பதே இலக்கின் உறுதியான எண்ணம். ஒன்றுபட்டு ஒருமைப்பாட்டுடன் வேலை செய்ய மறுக்கும் ஒவ்வொருவரும் நீங்கள் யாருக்காக வேலை செய்கின்றீர்கள் என்ற கேள்விக்கு ஈழத்தமிழ் மக்களுக்குப் பதில் கூறியே ஆக வேண்டும்.

சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பின் அறிமுகத்துடன் ஈழத்தமிழர்களுக்கான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டு அவர்கள் சிறிலங்கா பௌத்த சிங்களக் குடியரசின் சமுதாயம் எனச் சிறுபான்மை இனத்துக்குரிய அனைத்துலகப் பாதுகாப்பையும் கூட இழக்கும் நடைமுறை எதார்த்தம் தோன்றி விடும்.

அதன் பின்னர் எந்த ஒரு அனைத்துலக நாடோ அமைப்போ ஈழத்தமிழர்களுக்குச் சிறிலங்காவின் இறைமையை மீறி எந்த ஒரு சிறு உதவியைக் கூடச் செய்ய இயலாத நிலை உருவாகும்.

அத்துடன் இன்று தேசமக்கள் என்ற நிலையில் இருக்கையிலேயே உலகின் பல நாடுகளிலும் ஈழத்தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களை மட்டுமல்ல ஈழத்தமிழரின் அமைதிக்கு மனித உரிமைக்கு புனர்வாழ்வுக்குப் புனரமைப்புக்கு உழைப்பவர்களைக் கூட பயங்கரவாதிகள் எனப்பட்டியல் இடப்படும் சிறிலங்காவுக்குச் சாதகமான உலகநாடுகளும் அமைப்புக்களும் நாளை ஈழத்தமிழர்கள் சிறிலங்காவின் சமுதாயம் என்ற நிலை உருவான பின்னர் ஈழத்தமிழர்களுக்கு நீங்கள் சிறிலங்காவிடமே அனைத்தையும் பெற்று வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்திப்பைச் செய்வார்கள் என்பது வெளிப்படையான ஒன்று.

எனவே இந்த அபாயகரமான அரசியல் சூழ்நிலையிலாவது ஈழத்தமிழ் செயற்பாட்டாளர்கள் அனைவரும் ஒன்றுபடுங்கள். உலகின் அதிகார மையங்களுக்குச் சிறிலங்காவை எந்த அளவுக்கு தேவையோ அதனை விட பலமடங்கு ஈழத்தமிழர்களது தாயகத்திலும் உலகெங்கும் உள்ள மனித வலுவும் மூலதனப் பலமும் கல்வித் தொழில்நுட்ப அறிவும் ஆற்றலும், தாயக இயற்கை வளமும் இந்துமாக்கடல் முக்கியத்துவமும் உலகின் பாதுகாப்பான அமைதிக்குத் தேவை என்ற உண்மையை எல்லா உலக அதிகார மையங்களுக்கும் வெளிப்படுத்துங்கள். உங்களுக்குள் தேவையற்ற மோதல்களை விடுத்து தேசத்தை மீளுருவாக்கும் இப்பணியில் அனைத்து ஈழத்தமிழர்களையும் அரவணையுங்கள் இணையுங்கள். அப்பொழுதுதான் உலக ஆதரவின் மூலம் ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவு ஈழத்தமிழர்களுக்குக் கிட்டும் என்பதே இலக்கின் இறுதியும் உறுதியுமான எண்ணம். இனி ஒரு நிமிடம் கூட வீணடியாதீர்கள். ஒன்றுபட்டால் சமூக பொருளாதார அரசியல் ஆன்மீக உலகில் ஈழத்தமிழரால் செய்ய இயலாதது எதுவுமில்லை என்பதை மனதிருத்தி தேசமாக எழுங்கள்.

இலக்கின் இந்த ஆசிரிய கடிதத்திற்கான சிந்தனைகள் பிறப்பதற்கு தகவல் தளமாக விளங்கிய வீரசேகரி மின்னிதழில் 30.10.2023 இல் விஸ்ணுவால் வெளியிடப்பட்ட ஆர் ராம் எழுதிய "கனவுத் திட்டத்தை மீளமைத்தது சீனா" என்ற கட்டுரைக்கு 'இலக்கு' தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

• • •

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

# International Crimes



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள் பொத்தக ஆசிரியர், பட்டய முகாமைக் கணக்காளர்

## பகுதி 07–( இறுதிப் பகுதி )

பன்னாட்டுக்குற்றங்களான மானுட குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவை தொடர்பாக கடந்த வாரங்களில் நாம் கவனம் செலுத்தியிருந்தோம். இன்று நான்காவது குற்றமான ஆக்கிரமிப்பு தொடர்பாக நாம் கவனத்தைச் செலுத்துவோம்.

ரோம் பன்னாட்டு நடைமுறைவரைபின் அகவிதி 8 ஆக்கிரமிப்பு என்பதனை பின்வருமாறு வரையறை செய்கின்றது:

*ஆக்கிரமிப்புக்குற்றத்தை நிகழ்த்தத்தக்கவாறு கட்டுப்பாட்டை பிரயோகிக்கத்தக்க வலுவைக் கொண்ட ஒருவரையோ அல்லது அரசையோ அல்லது இராணுவத்தையோ சரியாக திட்டமிட்டு உருவாக்கி ஆக்கிரமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும் அல்லது நிகழ்த்தி முடிக்கும் செயற்பாடு அவற்றின் பண்புகள், அளவு அல்லது பரிமாணத்தினால் ஆக்கிரமிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பட்டயத்தை வெளிப்படையாகவே மீறுமாயின் அவை ஆக்கிரமிப்புக் குற்றங்களாகும்" என வரையறை செய்தது.*

***இவ் வரையறைக்கு அமைவாக ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளானவை:***

*ஒரு நாட்டின் இறைமைக்கு எதிராக அல்லது அந்நாட்டின் ஆள்புல கட்டுப்பாட்டிற்கு எதிராக அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக மற்றொரு நாடு தனது படைவலுவை பிரயோகஞ் செய்வது அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்திற்கு ஒவ்வாத நடவடிக்கை களை முன்னெடுப்பது என்பதாக அமைகின்றன.*



*டிசம்பர் 14, 1974 இல் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானம் 3314 (ஓஓஐஓ) படி பின்வரும் நடவடிக்கைகளை ஆக்கிரமிப்பு குற்றங்களாக பதிவிட முடியும் என ஐ.நா வரையறுக்கின்றது.*

***1. ஒரு நாட்டினது அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நிலத்தினைக் கைப்பற்றும் முகமாக வேற்றுநாட்டு இராணுவம் அத்துமீறிப் பிரவேசித்தல், தாக்குதலைத் தொடுத்தல் அல்லது அவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் ஊடாகத் தற்காலிகமாகவேனும் அந்நிலப் பரப்பில் இருத்தல்.***

***2. ஒரு நாட்டிற்குரிய நிலப்பரப்புக்குள் இருந்து கொண்டு அந்நாட்டிற்கு எதிராகவே குண்டுகளை வீசுதல் அல்லது வேறு எவ்வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துதல்.***

***3. ஒரு நாட்டினது கடற்கரை மற்றும் துறை முகங்களின் பாவனையை மற்றொரு நாட்டின் ஆயுதப்படை தடுத்தல்.***

***4. ஒரு நாட்டின் ஆயுதப்படையின் மீது நிலத்திலோ, கடலிலோ, வானிலோ அல்லது கடற்படைக் கப்பல்கள், வான்படை விமானங்களின் மீதோ மற்றொரு நாட்டின் ஆயுதப்படை தாக்குதலை நடாத்துதல்.***

***5. ஓர் ஒப்பந்தத்தின் பேரில் ஒரு நாட்டின் கட்டுப்பாட்டு நிலப்பகுதிக்குள் அந்நாட்டின் அனுமதியுடன் வரவழைக்கப்பட்ட மற்றொரு நாட்டு இராணுவம் அவ்ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்பும் அந்நாட்டின் நிலப்பகுதிக்குள் தங்கியிருத்தல்.***

***6. தனது நாட்டு நிலப்பகுதியை மற்றொரு நாட்டின் பாவனைக்கு வழங்கியுள்ள நிலையில் அவ்வாறு பாவனைக்குப் பெற்றுக்கொண்ட நாடு அந்நிலப் பகுதியில் இருந்து மூன்றாம் நாடொன்றின் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள்.***

***7. ஒரு நாட்டின் இராணுவ இசைக்குழுவை, இராணுவக் குழுக்களை, கூலிப்படைகளை மற்றொரு நாட்டின் எல்லைக்குள் இராணுவ நடவடிக்கைகளை அல்லது அதனோடிணைந்த நடவடிக்கைகளை நிகழ்த்த அனுப்புதல்.***



*என்பவையே ஆக்கிரமிப்புக் குற்றங்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளன.*

*ஆகவே நாம் இப்போது பன்னாட்டுக் குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள நான்கு குற்றங்களையும் அவற்றிற்கான பன்னாட்டு நியமங்களையும் அவை கடந்த காலங்களில் பிரயோகிக்கப்பட்ட விதங்களையும் அவதானித்துள்ளோம்.*

*ஒவ்வொரு ஈழத்தமிழனுக்கும் பன்னாட்டுக்குற்றங்கள் தொடர்பான தெளிவான அறிவு மிக முக்கியமானது. ஏனைய உலக நாடுகளுடன் நிலத் தொடர்பற்ற ஒரு மிகச் சிறிய நிலப்பரப்பில் இருந்துகொண்டு முப்பத்தியாறு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு இனம் தீரமிக்க விடுதலைப் போராட்டத்தைச் நடத்தியிருந்தது. அதனை ஒரு சில நாடுகள் இணைந்து அழித்துவிட நினைத் தும் முடியாமலிருந்தது. காலச்சக்கரத்தில் பன்முகப் படுத்தப்பட்ட பலநாட்டு இராணுவ, அரசியல், பொருளாதார, புலனாய்வு மற்றும் தாக்குதல் உதவிகளின் ஊடாகவே அந்த இனத்தின் ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டது. அவ்வாறாயின் இத்தகையதொரு எதிர்ப்பைச் சந்தித்த அந்த இனத்தின் ஆற்றலுக்கு மிக முக்கியமானதாக இருந்தது எது என்று ஆராய்வோமானால் அந்த இனத்தின் அறிவு தான். ஒரு தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவு ஆத்மபலமாக வீறுகொண்டெழுந்த போராட்டமே எமது தாயக விடுதலைப் போராட்டம்.*

*ஆகவே அறிவைப் பெற்றுக்கொள்வது ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு இன்றியமையாதது.*

*நாம் கடந்த சில வாரங்களாகப் பேசிய பன்னாட்டுக் குற்றங்கள் யாவும் தமிழர்களின் மீது நிகழ்த்தப்பட்டது என்பதை அறிவுரீதியாக நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். தற்போது அதனை நிரூபிப்பதற்கான ஆற்றலும் உங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ளது. ஏனெனில் யாராவது ஒருவர் அவர் ஈழத் தமிழராக இருந்தாலென்ன, ஈழத்தமிழரின் பிரபல்யம் மிக்க "அப்புக்காத்து" சட்டத்தரணிகளாக இருந்தாலென்ன, ஈழத்தமிழ் அரசியல் வாதிகளாக இருந்தாலென்ன, பன்னாட்டவர்களாக இருந்தாலென்ன, ஐநாவின் மனித உரிமை ஆணையர்களாக இருந்தாலென்ன அவர்கள் ஈழத்தமிழர்களின் மீது பன்னாட்டுக் குற்றங்கள் நிகழ்த்தப்படவில்லை என்று பேச வெளிக்கிடும் போதே அங்கிருக்கும் உங்களில் ஒருவரால் அவர்களின் கருத்துகளை மறுத்து வாதிடக்கூடிய ஆற்றலை இந்தக் கட்டுரைகளின் வாயிலாக நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்.*

*இப்போது எங்களுக்கிருக்கும் விடுதலைக் கான வாய்ப்பொன்றாக நாம் புரிந்துகொள்ள ஈழத்தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட பன்னாட்டுக்குற்றங்களை விசாரிக்கக்கோருவது தான்.*

*இக்கோரிக்கையானது மிகப் பலமாக எழுமாயின் அப்பலமான கோரிக்கை அழுத்தமாக பன்னாடுகளின் மீது விழும். ஆகவே விசாரிக்க வேண்டிய கடப்பாடு பன்னாடுகளுக்கு எழும். அவ்வாறு விசாரணையை முடக்கிவிட முயற்சிக்கும் போது அப்பன்னாடுகளுக்கு இருக்கும்*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஆக்கிரமிப்பதில் சிங்களத்திற்கு உள்ள வேகம்

# அதனை தடுப்பதற்கு தமிழ் மக்களிடம் இல்லை

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தின் தற்போதை நிலைமையினை பார்க்கும்போது இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் பனிப்போரை நிலைமையினை வெளிப்படுத்தி உள்ளதுபோன்ற நிலைமையினை காணமுடிகின்றது.



இன்றைய நிலையில் கிழக்கில் நடைபெறும் செயற்பாடுகளை கடந்துசெல்ல முடியாத நிலைமையே காணப்படுகின்றது.குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய நிலைமையினை தொடர்ந்து வெளிக்கொணர வேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பதை யாரும் இலகுவில் கடந்து செல்ல முடியாது என்பதை அண்மைக்காலக செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

குறிப்பா மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரை காணி பிரச்சினையென்பது வெறுமனே ஒரு பகுதியினரின் காணப்பிரச்சினை யென்ற தொனியில் கடந்துசெல்லமுடியாது என் பதை அனைவருக்கும் இன்று உணரும் நிலை மையினை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பது டட்லி சேனநாயக்க காலம் தொடக்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. 1956 ஆம் ஆண்டு இதன்காரணமாக இலங்கை யில் தமிழர்களுக்கு எதிரான பாரிய வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டமையே சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னெடுக்கப் பட்ட செயற்பாடாக கருதப்படுகின்றது. 1960ஆம் ஆண்டு வரை வடகிழக்கில் எந்த தொகுதியிலும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான சரித்திரம் இல்லை. 1960ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத்தேர்தலில்தான் முதன்முதலாக அம்பாறை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி கை சின்னத்தில் போட்டியிட்ட விஜேயசிங்க விஜயபாகு என்ற சிங்களவர் பாராளுமன்ற உறுப்பினரானார்.



1961ஆம் ஆண்டு ஏப்ரல்,10இல் மட்டக்களப்பு மாவட்டத்துடன் ஒன்றாக இருந்த அம்பாறை பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் என வர்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1977ஆம் ஆண்டு யூன்,24 ஆம் திகதி முதன் முதலாக தமிழர் தலைநகரமான திருகோணமலை மாவட்டத்தில் சேருவெல என்ற தொகுதி உருவாக்கப்பட்டு எச்.டி. லீலரெட்ண என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானார்.

1989,பெப்ரவரி,20 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்பேசும் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டது.ஆனால் 1994,ஆகஷ்ட்,20, இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மொத்தம் 06, ஆசனங்களில் 04, சிங்களப்பாராளுமன்ற உறுப்பினர்களும், 02, முஷ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவானார்கள்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அம்பாறை மாவட்ட நிலைமை சிங்கள, முஷ்லிம் அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.அம்பாறை மாவட்டத்தினை பொறுத்த வரையில் 1960ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் 29தமிழ் கிராமங்கள் காணாமல்போயுள்ளன.அம்பாறையில் தமிழர்களின் வரலாற்று சுவடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வடகிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டம் சொல்ல வேண்டியதில்லை 1977இல் சேருவெல சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டு இன்று வரை அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களால் தமிழர்கள் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.அங் இன்றுமும் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குள் விகாரை அமைப்பகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்த மான நிலத்தில், 23 விகாரைகளின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 31 விகாரைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று வனப்பாதுகாப்பு திணைக்களம் 43435 ஏக்கர் காணியினையும், தொல்பொருள் திணைக்களம் 2605 ஏக்கர் காணியினையும், புல்மோட்டை அரசிமலை பௌத்தப்பிக்கு கிழக்கு செயலணி 2908 ஏக்கர் காணியினையும் ஆக்கிரமித்துள்ளனர்.

மேலும் அண்ணளவாக முப்பதாயிரம் ஏக்கர் காணியை வனவிலங்கு திணைக்களம் தங்களுக்குரியது என தெரிவித்து வருவதால் 28 ஆயிரம் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி பண்ணையாளர்கள் அவதியுற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் ஏறக்குறைய 74, வீதமும், இஷ்லாமியர் 25, வீதமும், சிங்களவர் 1, வீதமாகவும் உள்ள நிலை யில் (2023, புள்ளிவிபரம் எடுத்தால் தமிழர் வீதம் இன்னும் குறையலாம்)சிங்களவர்களின் வீதத்தினை அதிகரித்து எதிர்காலத்தில் அரசியல் ரீதியான இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தற்போது மயிலத்தமடு, மாதவனை, கெவிளியாமடு ஆகிய மேச்சல் தரைகளை இலக்கு வைத்து அம்பாறை, பொலன்றுவை, மொன்றாகலை மாவட்ட சிங்கள மக்களை வரவழைத்து அத்துமீறிய சிங்கள குடிப்பரம்பலை மேற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தையும் எதிர்காலத்தில் 2030ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.



இவ்வாறான நிலையிலேயே மட்டக்களப்பு சித்தாண்டியில் 50நாட்களையும் தாண்டிய வகையில் கால்நடை பண்ணையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றனர். இந்த போராட்டம் பண்ணையாளர்களின் போராட்டமாக மட்டுமல்லாமல் கிழக்கின் முழு இருப்புக்கான போராட்டமாக மாற்றமடையும் நிலையுருவாகிவருகின்றது.

அண்மையில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டமும் வடக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குழுவினரின் வருகையும் இந்த போராட்டத்தினை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டுசெல்லும் நிலை காணப்படுகின்றது.



கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவிலான உரிமைசார்ந்த போராட்டங்களை முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக நில ஆக்கிரமிப்புக்கான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையின் ஒரு துளியை நெஞ்சில் நிறுத்துவோம்



“ “தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள மாவீரத் தியாகிகள், காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது அர்ப்பணிப்புகள் காலத்தால் அழியாதவை. ‘உன்னத உயிரிலும் சுதந்திரம் மேல்’ என்ற தலைவனின் கூற்றுக்குத் தம்மையே தந்தவர்கள் எம் மாவீரர்கள்.பதின்நான்கு வருடங்கள் கடந்தும் நாங்கள் இன்னமும் அவர்களுக்கு வெறும் விழாக்கள் மட்டுமே கொண்டாடுகின்றோம். முன்னூறு வருடத்தின் பின் காலம் தந்த தலைவனின் சிந்தனைகள் செயல்கள் போதனைகள் ஒன்றுமே புரிந்தவர்கள் எம்முள் இல்லை என்றல்லவா அர்த்தம்

முன்னூறு வருடத்தின் பின் காலம் தந்த தலைவனின் சிந்தனைகள் செயல்கள் போதனைகள் ஒன்றுமே புரிந்தவர்கள் எம்முள் இல்லை என்றல்லவா அர்த்தம். உலகிலே பூட்டப்பட்ட பல கதவுகளை எம் தலைவனும், மாவீரர்களும் மக்களும் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்து திறந்துள்ளார்கள்.

இன்னமும் திறந்தே உள்ளது. உலக சட்டங்களுக்கு அமைய காலத்தின் விளக்கேந்தி, இருள் போக்கி உலகில் தடையின்றி மாவீரருக்கு ஒழியேற்றாமல் வருடம் ஒருமுறை மாவீரர் நாள் கொண்டாடிவிட்டு அவரவர் வேலையைப் பார்க்கச் சென்று விட்டால் எம் மாவீரர்களினதும் மக்களினதும் இலட்சியம் காலத்தால் அழிக்கப்பட்டு விடும். நாங்கள் காலத்தால் அழியாத துரோகிகள் ஆகின்றோம்...

### அடுத்த கட்ட நகர்வு என்பது எப்படிச் சாத்தியமாகும்

உலகம் கண்மூடி எமைக் கண்கட்டி முள்ளிவாய்க்காலில் கொன்றபோது, நாற்பது ஐம்பது வயதானவர்கள் இன்று ஐம்பத்தி ஐந்து அறுபத்தி ஐந்தாகியுள்ளனர் அவர்கள் இன்னும் எவ்வளவு காலம் வாழ்வார்கள் என்பதே பெரிய ஒரு கேள்விக்குறி? உலக அரசியல் மாற்றம் இன்னும் நூறு வருடத்தின் பின் தான் எங்களை அங்கீகாரம் செய்யும் என்றால் அதற்கு நாங்கள் என்ன செய்துள்ளோம்?

வெறும் மாடு மேய்த்தவர்களின் வரலாறே ரோமர் ஆட்சியும் ரோமாபுரியும். மற்றும் பிணங்களை வைத்து வரலாறு கதைக்கும் எகிப்தியர்களும் இன்னும் எத்தனையோ...உலகின் மூத்த குடியான நாங்கள் எல்லாவற்றையும் தொலைத்து, இன்று தமிழ் என்னும் மொழியை மட்டும் எமது அடையாளமாக வைத்துள்ளோம். இது இன்னும் எத்தனை காலம் இப்படிப் போகும்?

இரத்தமும் சதையும் குடுத்து வளர்த்த எம் விடுதலை தாகம் தணியாது, அணையாத யாகமாகத் தொடர எங்கள் காலத்திலேயே வழி சமைக்க வேண்டும். இது எங்கள் ஒவ்வொருவருடைய காலத்தின் கட்டாய கடமை ...

முடிவல்ல முள்ளிவாய்க்கால் என்று சொல்லிச் சொல்லி காலம் கடந்து சிலர் அதை மறந்தும் நிற்கின்றோம்.

### வரலாறே வழிகாட்டி

உலக வரலாற்றில் காலம் கடத்திப் பல விடயங்கள் காணாமல் போயுள்ளன. இதுவே எமக்கு நடக்கிறது.

காலம் எங்களைப் பல பிரிவுகளாகப் பிளந்து எதிரியானவன் எமக்குள்ளேயே பலரைத் தேர்ந்தெடுத்து, எமக்கு எதிரான, மிகப் பலமான பல குழுக்களை உருவாக்கி எமக்குள் மோதல்களை உருவாக்கியுள்ளான், அதை அறியாமலே சிலர் அதற்குள் சிக்குண்டு, தவறை உணர்ந்தும் அந்தச் சதிவலையிலிருந்து மீண்டு(ம்) வரமுடியாதுள்ளனர். காலம் மிக வேகமாகக் கடந்து செல்கின்றது. சிலர் அறியாமையால் ஏற்படும் அருவருப்பான அடங்கா ஆசையினால் எதிரிக்கு விலை போயுள்ளனர். தம் இனத்தை விற்றுப் பிழைக்கின்றனர். இந்த நிலையை மாற்ற வேண்டும் விழிப்புணர்வே விடுதலையின் முதற் படி...

சமத்துவ உலகில் வீர சரித்திரம் படைத்த தமிழரும் ஓர் குடி என்று நாங்கள் ஒன்றாகி மீண்டு மீண்டும் உரத்துச் சொல்வோம். அன்பெனும் பாதையில் நடந்து தமிழ்ப் பண்பெனும் பாரம் பரியத்துடன் உலக நீதியும் நேர்மையும் தவறாது நின்று யுத்தம் செய்து தம்மையே திறந்து விதைத்த எம் வீரர்கள் வரலாற்றைச் சொல்வோம்.

மனமெலாம் உன் மந்திரம்
சிரம் எல்லாம் உன் சிந்தனை
உணர்ந்து தெளிந்த பின்
உனைத் தேடியோ அலைந்தோடியோ
உன் இருப்புத் தேடுவோரும்
உன் இறப்பும் தேடுவோரும்
உன் சிந்தனைச் சிறப்பு அறியா மூடர்
நான் பெரிது நீ பெரிது என்றில்லாமல்
நாடு பெரிது என்றாயே
அகங்காரம் அழித்து
அதிகாரம் அடக்கிய
அழியாத உன் நற் சிந்தனையால் எமை
ஒன்றாக இணைத்தாயே
அன்பாலே அரவணைத்துத்
தாயான தலைமகனே
வாழ்விலே தோல்விகண்ட உறவற்ற

## வரன்–ஜெர்மனி

உயிர்களுக்கு
உறவாக நீயிருந்து
வெற்றி மனையமைத்து
அவர் வாழ்வினை ஜெயித்தாயே
வாடிய உள்ளங்கள் உன் நிழல் பட்டு
மீண்டு (ம்) மகிழ்ந்து எழுந்தனரே
தள்ளாடும் வயதினில்-தனியாக
உனைத் தேடும் உன் தாய்
இன்னும் குறையாத வீரத்துடன்
நிலம் புரைபோக விடமாட்டோம் என்று
பறை தட்டிச் சொன்னாள்.

கரிகாலன் கண்முன்னே
வழிகாட்டத் தமிழீழம் வெல்வோம் என்றால்
தலைவனை உணர்ந்த தாய்
தயங்காமல்ச் சொன்னாள்
சிந்திய குருதி வீண்போக மாட்டா
வருவான் ஒருவன் சிந்தனைச் சிற்பியாய்
தலைவனின் பிள்ளையாய்
தமிழர் சிரம் சாய்த்து ஏற்கும் இனம் காக்கும்
பிள்ளையாய்
அன்பாய்ச் சனம் தூக்கிக் கொண்டாடும்
தலைவனின் அம்பாய்

உலகளாவிய ரீதியில் இருக்கும் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னும் இன்று வரை நம் மக்களுக்கும் மாவீரர் குடும்பங்களுக்கும் உதவிகள் செய்த வண்ணம் உள்ளார்கள். ஆனால் உங்களால் அவர்களுடைய அடிப்படை தேவைகளை கூட இன்னமும் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஏனென்றால் நாங்கள் ஒன்றாக நின்று ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் இந்த விடயங்களை செய்யாததே எங்கள் மாபெரும் குற்றம், பிழை.

இப்போது உலகமெல்லாம் பரவி வாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஊருக்கு ஒரு அமைப்பை உருவாக்கி ஒன்றாக இருந்த எங்களை இழந்து பிரித்து அவர்கள் எல்லோரும் தனித்தனியாக நின்று உதவி செய்கின்றோம் என்று அவர்களின் பணங்களை பிரயோகம் செய்கின்றார்கள். ஒன்றாய் நின்றால் மட்டுமே எங்கள் மாவீர இலட்சிய கனவு நினைவாகும். மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் சுதந்திர தமிழீழம் மலர வேண்டும்.

வரலாறே வழிகாட்டி
**அடிபணியாத தலைவனே எமக்கு வரலாறு தந்த வழிகாட்டி.**

நன்றி

# பெருந்தோட்டத்துறையை மழுங்கடிக்க தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளதா?

**துரைசாமி நடராஜா**

பெருந்தோட்டத்துறையின் எதிர்காலம் தொடர்பில் நிலையற்ற வெளிப்பாடுகள் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றன. 2050 ம் ஆண்டளவில் பெருந்தோட்டத்துறை இல்லாமல் போகும் அபாயம் மேலோங்கி காணப்படுவதாகவும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையானது தோட்டங்களை நம்பிவாழும் தொழிலாளர்களுக்கு பாரிய தாக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக அமையும். எனவே தொழிலாளர்கள் தோட்டத் தொழிற்றுறையை மட்டுமே நம்பிக் கொண்டிருக்காமல் மாற்றுத் தொழிற்றுறை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவையும் மேலெழுந்துள்ளது.



இலங்கையின் தேசிய வருமானத்தில் கணிசமான வகிபங்கினைக் கொண்டவர்களாக மலையக மக்கள் விளங்குகின்றனர். பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்று பல துறைகளிலும் மலையகத்தவர்கள் ஈடுபட்டு இலங்கைக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றார்கள். அதிலும் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் பங்களிப்பு சற்று அதிகமாகவே உள்ளதையும் இங்கு குறிப்பிட்டாதல் வேண்டும். மேற்கண்ட துறைகளில் பெண்கள் நெருக்கீடுகள் பலவற்றையும் சந்தித்து வருகின்றபோதும் அவர்களின் உழைப்பு அதிகமாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் தேசிய வருவாயில் கூடிய ஆதிக்கத்தை தேயிலை ஒருகாலத்தில் செலுத்தி இருந்தது. இதனடிப்படையில் 1959 இல் இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின்பங்கு59.6வீதமாகஅமைந்திருந்தது. இது 1969 இல் 57.8, 1976 இல் 43.6, 1980 இல் 35.1, 1985 இல் 33.1, 1987 இல் 25.9, 1989 இல் 24.3, 1990 இல் 24.9 என்ற வீதத்தில் அமைந்திருந்தது. இதில் பெருந்தோட்டத்துறையும் அதிகளவில் செல்வாக்கு செலுத்தியது. 1995 இல் 168.8 மில்லியன் கிலோகிராம் தேயிலை பெருந்தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104 மில்லியன் கிலோகிராமாக அமைந்திருந்தது.

தேயிலை உற்பத்தி பரப்பினைப் பொறுத்தவரையில் 1980 இல் கண்டி, நுவரெலியா,பதுளை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, குருநாகல், கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் 211,256 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. இதேவேளை 2002 இல் இம் மாவட்டங்களில் 193,925 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில்1980 இல் 39,930 எக்டேயர் பரப்பிலும், 2002



இல் 50,266 எக்டேயர் பரப்பிலும் தேயிலை உற்பத்தி இடம்பெற்றிருந்தது. இதேவேளை 1924 இல் இலங்கையில் 169,285 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றதோடு 92,354,128 கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

### சிறுதோட்டம் ஆதிக்கம்

இலங்கையின் தேயிலை ஏற்றுமதியினை நோக்குகையில் 2013 இல் ரஷ்யா உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு 68.39 வீதமான தேயிலை ஏற்றுமதி இடம்பெற்றது. இதேவேளை ஆசிய நாடுகளுக்கு 8.12 , ஐரோப்பிய நாடுகளுக்கு 4.00, ஆபிரிக்க நாடுகளுக்கு 6.30, அமெரிக்கா,கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு 2.16, ஏனைய நாடுகளுக்கு 11.03 வீதமான தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்திருந்தது. 1990, 2000, 2010 ஆகிய ஆண்டுகளிலும் ரஷ்யா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கே இலங்கை அதிகளவான தேயிலையை ஏற்றுமதி செய்திருந்தது.

தேயிலை உற்பத்தி, தேசிய வருமான ஈட்டல் என்பவற்றில் பெருந்தோட்டங்கள் ஆதிக்கம் செலுத்திய நிலைமாறி பின்னாளில் சிறுதோட்டங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றது. இந்நிலைக்கு காணிப்பகிர்வில் எம்மவர்கள் புறக்கணிக்கப்பட்டமை, சிறுதோட்ட அபிவிருத்தியில் அரசாங்கம் காட்டிய அதீத கரிசனை, சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு பசளை மானியங்கள் மற்றும் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை போன்ற பல நிலைமைகள் சிறுதோட்டங்களின் எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. இதனால் சிறுதோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு உற்பத்தியிலும் சிறுதோட்டங்கள் முன்னிற்கத் தொடங்கின. 1983 இல் இலங்கையின் மொத்த தேயிலை நிலப்பரப்பில் 75,769 எக்டேயரில் சிற்றுடைமைகளின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. எனினும் சிற்றுடைமைகளின் தேயிலை பரப்பு பின்வந்தகாலங்களில்படிப்படியாகஅதிகரித்தது. இதற்கேற்ப 1994 இல் 76,569 எக்டேயர், 2005 இல் 118,274 எக்டேயர், 2014 இல் 132,335 எக்டேயர் நிலப்பரப்பில் சிறுதோட்ட உரிமையாளர்களின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது.



1970 களில் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் மட்டுமே சிறுதோட்ட உரிமையாளர்களாகக் காணப்பட்டனர் எனினும் தற்போது நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிற்றுடைமையாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் 88.16 வீதமானவர்களுக்கு ஒரு எக்டேயருக்கும் குறைவான தேயிலைக் காணிகள் இருப்பதாகவும் தகவல்கள் வலியுறுத்துகின்றன. இந்நிலையில் பெருந்தோட்டங்களில் அதிகளவானதமிழர்கள்தொழிலாளர்களாக இருப்பதால், இனவாத நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பெருந்தோட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டு, சிறுதோட்டங்களின் ஆதிக்கத்திற்கு வலுசேர்க்கப்படுகின்றதா? என்றும் சிலர் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

தோட்டங்கள் கம்பனியினருக்கு கைமாறியதன் பின்னர் தோட்டத்துறையில் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வருவதாகவும், தொழிலாளர்களின் நலன்கள் தொடர்பிலோ அல்லது தோட்டத் துறையின் அபிவிருத்தி தொடர்பிலோ எவ்விதமான கவனமும் கம்பனியினரால் செலுத்தப்படுவதில்லை என்றும் பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதும் நீங்கள் அறிந்ததேயாகும். இதனால் தொழிலாளர்கள் அதிருப்தியுடன் பணியாற்றி வருவதாகவும், இன்னும் சில தொழிலாளர்கள் தோட்டத் தொழிற்றுறையில் இருந்தும் விலகிச் சென்றுள்ளதாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனால் தேயிலை பெருந்தோட்டங்களில் பதிவு செய்திருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டது. 1980 இல் 541,971தொழிலாளர்கள் தேயிலை பெருந்தோட்டங்களில் பதிவு செய்து கொண்டிருந்தனர். எனினும் 2015 இல் இவ்வெண்ணிக்கை 158,322 ஆக வீழ்ச்சி கண்டது. இந்நிலையில் சமகாலத்தில் இவ்வெண்ணிக்கையில் மேலும் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளமையும் தெரிந்ததாகும்.

எனினும் தொழிலாளர்கள் கம்பனியினரின் நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படும் கண்டனத்தை கம்பனி தரப்பினர் மறுதலித்துப் பேசியுள்ளனர். ‘நெருக்கடியான காலகட்டத்திலும் தொழிலாளர்களின் நலன்களில் நாம் அக்கறையுடன் செயற்படுகின்றோம். ஆனால் கம்பனிகள் தொழிலாளர்களுக்கு மேலும் இன்னல்களையும் நெருக்கடிகளையும் தருவதாக விஷமத்தனமான பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்தபோதும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் இருபது இலட்சமாகும். இத்தனை பேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை நாம் மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே கொண்டு நடத்துகிறோம். 150 வருட வேதன முறையை மாற்றியமைக்க வேண்டுமெனவும் வருமான பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களிடம் கோரினோம். ஆயினும் அவர்கள் அதுகுறித்து அக்கறை செலுத்தவில்லை.

### பஞ்சப்பாட்டு

கொவிட் தாக்கம் மற்றும் இரசாயன உர இறக்குமதி தடை காரணமாக தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. 2020 இல் 300 மில்லியன் கிலோகிராம் தேயிலையை உற்பத்தி செய்த நாம் 2022 இல் 251 மில்லியன் கிலோகிராம் தேயிலையையே உற்பத்தி செய்துள்ளோம். எனினும் தொழிலாளர்களின் நலன்களில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# காஸாப் போரின் புதிய கட்டம்

## அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் விடுக்கும் சவால்

**தமிழில்: ஜெயந்திரன்**

‘இஸ்ரேலின் பாதுகாப்புக்கு தேவையான உதவிகளைக் கொடுத்து அதனைப் பலப் படுத்துவதிலும், சமகாலத்தில் உக்ரேனுக்கு ஆதர வளித்து சீனாவைக் கட்டுப்படுத்துவதிலுமே அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு முற்று முழுதாகத் தங்கியிருக்கிறது’ என்று வாதிட்டு, வெளிநாட்டு உதவி தொடர்பாக கூடுதலான நிதியுதவி அளிக்கவேண்டும் என்று பைடன் முன்வைத்த வேண்டுகோளின் நியாயப்பாட்டை எடுத்துச்சொல்வதற்காக, அமெரிக்காவின் இராஜீக செயலர் அன்ரனி பிளிங்கனும் *(Antony Blinken)* பாதுகாப்புச் செயலர் லொயிட் ஒஸ்ரினும் *(Lloyd Austin)* கப்பிற்றல் ஹில் *(Capitol Hill)* மண்டபத்துக்கு வருகை தந்திருந்தனர்.



அமெரிக்காவின் எதிரிகளுக்கு எதிராக ஓர் உறுதியான, ஒருங்கிணைந்த கூட்ட ணியை ஏற்படுத்துவது தொடர்பான தனது உரையை ஆரம்பிக்கு முன்னரே, இரத்தம் தோய்ந்தவர்கள் போல் தோற்றமளிக்கக்கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், காஸாப் பிரதேசத்தில் போர் நிறுத்தத்தை உடனடியாக அமுல் செய்யும் படி கோசம் எழுப்பிக்கொண்டு அந்த மண்டபத்துக்குள் நுழைந்தனர். காவல்துறையினர் மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில், பிளிங்கன் பல தடவைகள் தனது உரையை இடைநிறுத்த வேண்டியிருந்தது. இஸ்ரேலின் காஸாப் போர் தொடர்பாக வோஷிங்டனில் நிலவும் கருத்துப்பிளவுகளை மேற்கூறிய நிகழ்வு கோடிட்டுக்காட்டியது.




இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை கடந்த பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வருகின்ற போதிலும், ஒக்ரோபர் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலும் அதற்குப் பதிலடியாக பாலஸ்தீனத்தின் மேல் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்ற தாக்குதல்களும் உலகளாவிய வகையில் பல்வேறுபட்ட வகையில் பிளவுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஹமாசை அழிக்க வேண்டும். சமகாலத்தில், பிரதேச ரீதியான ஒரு போர் மூளாமல் பார்க்கவேண்டும் என்ற வகையில் பைடன் நிர்வாகத்துக்கும் இஸ்ரேல் அரசுக்கும் இது இக்கட்டான நிலையைத் தோற்று வித்திருக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றப் பட்டு, அவர்களது கோசங்கள் அமைதியான போது, காஸாப் போர் தொடர்பாக தமது நிர்வாகத்தின் சார்பில் ஒரு நிதானமான அணுகுமுறையை முன்வைக்க பிளிங்கன் முயற்சி செய்தார்.

“அதிபர் பைடன் ஆரம்பத்திலிருந்தே தெளிவுபடுத்தி வந்தது போல, தனது தேசத்தைப் பாதுகாப்பதற்கு இஸ்ரேலுக்கு உரிமை உண்டு என்பது மட்டுமன்றி கடமையும் அதற்கு உண்டு. அதே நேரம் போருக்குரிய சட்டவிதிமுறைகளை இஸ்ரேல் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பன்னாட்டு மனிதாயச் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், அப்பாவிப் பொதுமக்களின் இழப்பைத் தவிர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்றும் இஸ்ரேல் அரசுடன் நாங்கள் மேற்கொண்ட அனைத்து உரையாடல்களிலும் வலியுறுத்தி வந்திருக்கிறோம்” என்று பிளிங்கன் தனது உரையில் தெரிவித்தார்.



ஹமாஸ் நிர்வாகத்தின் கீழ் காஸாவில் இயங்குகின்ற சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, கடந்த செவ்வாய்க்கிழமை பாலஸ்தீனத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய ஏதிலிகள் மையத்தில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களின் காரண மாக, 52 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். மேற்படி தாக்குதலுக்கு பொறுப்பேற்ற இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு, அந்த மையத்தில் அமைந்திருந்த ஹமாசின் ஒரு இராணுவக் கட்டமைப்பை தாம் இலக்கு வைத்ததாகவும், சண்டையில் ஈடுபட்டுவரும் ஒரு முக்கிய தலைவர் அதில் கொல்லப்பட்டதாகவும், பொதுமக்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று பல வாரங்களாகவே தாம் அறிவித்துவருவதாகவும் விளக்கம் கூறியது. இஸ்ரேல் அதிகாரிகளின் தகவலின் படி, இஸ்ரேல் மீது ஒக்ரோபர் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட பயங்கரவாதத் தாக்குதலில் 1400 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். மேற்படி தாக்குதலுக்குப் பதிலடியாக காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் பரவலான குண்டுத்தாக்குதல்களின் காரணமாக 8300 பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஹமாசின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.



நிர்வாக ரீதியாக, பொதுமக்களின் இழப்பு என்பது போரிலே தவிர்க்க முடியாத ஒரு துன்பியல் இழப்பு என்றும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தும் வழக்கம் நீண்டகாலமாகவே ஹமாசுக்கு உண்டு என்றும் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

அதே நேரம், போரிலே இஸ்ரேலின் தாக்குதல்களின் காரணமாகப் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புகள், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி அமெரிக்காவைத் தனிமைப்படுத்தும் ஆபத்து இருக்கிறது என்பதை இந்த அதிகாரிகள் தனிப்பட்ட விதத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மேற்படி அதிகாரிகளின் கூற்றுகளுக்குத் தகுந்த ஆதாரங்கள் உண்டு என்று மூலோபாயம் மற்றும் பன்னாட்டுக் கற்கைநெறியின் ஒரு மூத்த ஆர்வலரும், அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சின்பன்னாட்டுப்பாதுகாப்புஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கின்றவருமான டானியேல் பீமான் *(Daniel Byman)* சுட்டிக்காட்டினார்.



இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களில் தாமும் இணைந்துகொள்வதாக ஹிஸ்பொல்லா ஏற்கனவே அச்சுறுத்தலை விடுத்ததுடன், லெபனானில் இருந்து இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது. பாலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பிரதேசத்திலும் அமைதியற்ற சூழ்நிலை காணப்படுகிறது. யேமனில் உள்ள ஹ_த்திப் பிரிவினர் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டிருக்க, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரானுக்குச் சார்பான பகுதிகளிலிருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்குப் பதிலாக சிரியாவிலுள்ள ஈரானுடன் தொடர்புபட்ட நிலைகள் மீது, அமெரிக்கா தாக்குதல்களை மேற்கொண்டிருக்கிறது என்று வெளிநாட்டுக் கொள்கை இதழில் தான் எழுதிய ஆய்வுக்கட்டுரையில் பீமான் குறிப்பிட்டிருக்கிறார்.

ஹிஸ்பொல்லா மற்றும் ஈரானின் ஆதரவு டன் இயங்கும் போராளிக் குழுக்களுடன் மேற்படி போர் விரிவடையும் போது, அது இஸ்ரேலுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலாக மாறும். அது மட்டுமன்றி, பன்னாட்டுப் பயங்கரவாதத்தைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்து இருப்பதோடு அமெரிக்காவின் பல நடவடிக்கைகளையும் அது பாதிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



போரில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பான திட்டமிடல் மேற்கொள்ளப்படும் விடயத்தில் அமெரிக்கா நேரடியாக ஈடுபடாத பின்புலத்தில், பாலஸ்தீனத்தின் மேல் மேற் கொள்ளப்படும் பாரிய தாக்குதல்கள் அப்பா விப் பொதுமக்களின் இழப்பை பெரிய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## பெருந்தோட்ட ... தொடர்ச்சி ...

மாற்றங்கள் இல்லை' என்று கம்பனி தரப்பினர் கருத்து தெரிவிக்கின்றனர். இந்நிலையில் உலக சந்தையில் தேயிலையின் விலை உயர்ந்தபோதும் கம்பனியினரின் பஞ்சப்பாட்டுக்கு குறைவிருக்கவில்லை. தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தை வழங்க வாய்ப்பிருந்தும் கம்பனியினர் அதனை மூடிமறைக்கவே முற்படுகின்றனர் என்று தொழிலாளர்கள் விசனம் தெரிவிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனிடையே இலங்கையில் 2050 ம் ஆண்டளவில் பெருந்தோட்டத்துறையை இல்லாமல் ஆக்குவதற்கு தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. எனவே பெருந்தோட்டங்களை சிறுதோட்டங்களாக்கி மலையகத் தமிழ் மக்களிடையே பகிர்ந்தளிக்கும் தீர்க்கமான அரசியல் நிலைப்பாடு அவசியமாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான எம்.திலகராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் தேயிலைத் துறையை பொறுத்தமட்டில் 75 சதவீத பங்களிப்பு சிறுதோட்ட உரிமையாளர்களால் வழங்கப்படுகின்ற அதேவேளை25 சதவீத பங்களிப்பை பெருந்தோட்டத்துறை வழங்குகின்றது. இந்நிலையானது எதிர்வரும் 2050 ம் ஆண்டு காலப்பகுதியில் 100 சதவீதம் சிறுதோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்க தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. 2050 வரை தற்போதைய அரசியல் செல்நெறியே கடைபிடிக்கப்படுமானால் அது முற்றுமுழுதான தோல்வியிலேயே போய் முடியும். மலையக மக்களின் பறிக்கப்பட்ட குடியுரிமையை மீளப் பெற்றுக் கொண்டாலும் அது அர்த்தமுடையதாக இல்லை என்றும் திலகராஜா சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.



பெருந்தோட்டத்துறை இல்லாமல் போவதென்பது பாரிய பின்விளைவுகளுக்கும் உந்துசக்தியாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை. இது அவர்களின் தொழிற்றுறையில் தாக்கத்தை ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க அவர்களின் இருப்பு மற்றும் அடையாளம் என்பனவும் கேள்விக்குறியாகும் அபாயமுள்ளது. பிழையான பதிவுகள், இடம்பெயர்வுகள் என்பவற்றால் மலையக மக்கள் ஏற்கனவே பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்க மேற்கொள்ளும் முயற்சிகள் அம்மக்களை அதளபாதாளத்திற்கே இட்டுச் செல்வதாக அமையும். அத்தோடு மக்களின் செறிவு சிதைக்கப்படுகையில் இம்மக்கள் சமூகத்தினரின் அரசியல், கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களும் கேள்விக்குறியாகும். எனவே சிறு தோட்ட உரிமையாளர்களாக இம்மக்களை உருவாக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதேயாகும். இது அம்மக்கள் காணியுரிமையைப் பெற்றுக்கொள்ளவும் அடிப்படையாக அமையும் என்று நம்பப்படுகின்றது.

இதுவொரு புறமிருக்க இந்திய வம்சாவளியினர் இங்கு காலடி வைத்து 200 வருடமாகியுள்ள நிலையில் அம்மக்கள் இன்னும் கூடிய கரிசனையுடன் கல்வித்துறையில் நாட்டம் செலுத்துவதன் ஊடாக சவால்கள் பலவற்றையும் வெற்றி கொள்ள முடியும் என்று புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.இதன் நம்பகத்தன்மையை மலையக மக்கள் புரிந்து செயற்படுதல் வேண்டும்.அதேவேளை மாற்றுத் தொழிற்றுறை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவையும் மேலெழுந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

• • •

## ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

இரண்டு வாய்ப்புகள்

1. **உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக விசாரணையை மேற்கொள்ளல்**
2. **உள்நாடு மற்றும் பன்னாடு இணைந்த கலப்பு (Hybrid) விசாரணைப் பொறிமுறையை உருவாக்கிச் செய்ற்படுத்தல்**
3. **பன்னாட்டுப் பொறிமுறையில் விசாரணைகளை முன்னெடுத்தல்**

உள்நாட்டுப் பொறிமுறையில் ஸ்ரீலங்காவின் நீதித்துறைப் பலவீனம் மிகத் தெளிவாக உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் மிகப் பிந்திய பலவீனமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதனை நாம் குறித்துக்கொள்ளலாம். அத்துடன் உள்நாட்டுப் பொறிமுறையில் தாம் விசாரணைகளை மேற்கொள்ள மாட்டோம் என்று ஸ்ரீலங்கா அரசு மறுத்துவருவதுடன் பன்னாட்டுக் குற்றங்கள் நிகழவில்லையென்றே சொல்லியும் வருகின்றது. ஆகவே நிகழாத குற்றத்திற்கு தாம் ஏன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா அரசின் வாதமாக உள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஒத்துழைக்காத ஸ்ரீலங்கா அரசு ஒருபோதும் கலப்புப் பொறிமுறைக்கும் ஒத்துழைக்கப் போவதில்லை. ஆகவே முதலிரு பொறிமுறைகளும் பயனற்றுப் போகின்றன.

இறுதியாக பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையே இயங்குநிலைக்கு வரும். அப்பொறிமுறையானது மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களையும் போர்க்குற்றங்களையும் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் சாத்தியமே தற்போதுள்ளது. ஏனெனில் பன்னாட்டு அரசுகளும், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உட்பட, இனப்படுகொலை நடந்ததை ஏற்றுக்கொள்ளத் தற்போதைக்குத் தயாராக இல்லை. என்றாலும்கூட முதலிரு குற்றங்களும் பன்னாட்டுத் தீர்ப்பாயமொன்றின் ஊடாக விசாரணைக்குட்படுத்தப்படும் போது இனப்படுகொலைக்கான நோக்கம் இருந்தது என்பது வெள்ளிடை மலையாகத் தெளிவாகும். அதனை மறுத்துவிட அப்பன்னாட்டு தீர்ப்பாயத்தினால் முடியாது போய்விடும்.

தமிழ்த் தேசிய விடுதலைக்காக பன்னாட்டுக்குற்றங்கள் நிகழ்ந்ததை நிரூபிக்க முயற்சிப்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் இடைவிடாது முயலவேண்டும். அதற்கான அறிவைத் தரும் சிறுமுயற்சியாகவே எனது "பன்னாட்டுக் குற்றங்கள்" நூல் இலகு தமிழில் இலங்கை மற்றும் ஐரோப்பிய தேசங்களெங்கும் வெளியாகியுள்ளது. எம்மீதான பன்னாட்டுக் குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஈழத்தமிழினத்தின் விடுதலை சாத்தியமாகும்.

புலம்பெயர் தமிழர்களிடமே எமது விடுதலைப்போரைக் கையளித்துச் செல்கிறேன் என்ற தேசியத்தலைவரின் நிறைவு வாசகங்களை ஒரு முறை ஞாபகப்படுத்தியபடி இத்தொடர் கட்டுரையை நிறைவுசெய்கிறேன்.

• • •

## காசாவில் இடம் ... தொடர்ச்சி ...

மீது ஆட்டிலறி தாக்குதல்களை மேற்கொண்டதாக கிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதல்களில் மேக்காவா 4 மற்றம் 3 ரக டாங்கிகள் அழிக்கப்பட்டதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் தரைப்படையினருடன் சில இடங்களில் மோதல்கள் இடம்பெற்றதாகவும், அல் ஜசின் 105 ரக ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலின் 3 வாகனங்கள் அழிக்கப்பட்டதாக அல் குசாம் பற்றலியன் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் அஸ்டோட் பகுதிகளில் ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்த காணொளிகள் வெளியாகியுள்ளன. எனினும் சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

அதேசயம், சிரியாவில் உள்ள அல் ஊமார் அமெரிக்க தளம் மீதும் ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த 19 ஆம் நாளுக்கு பின்னர் சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது 27 இற்கு மேற்பட்ட தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

## மாவீரர் துயிலும் ... தொடர்ச்சி ...

மாவீரர் துயிலும் முதல்கட்ட சிரமதானப்பணி ஆரம்பமாகியுள்ளது. இதில் பொதுமக்களும், அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் இணைந்து பணிகளை மேற் கொண்டிருந்தனர்.

அதேசமயம், புலம்பெயர்நாடுகளில் உள்ள தமிழ் மக்களும் மாவீரர் தினத்தை நினைவுகூரும் முகமாக ஏற்பாடுகளை உலகம் எங்கும் செய்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் எல்லை ... தொடர்ச்சி ...

பின்னர் அந்த பகுதியில் இருந்து அரச படையினர் வெளியேறியதாக மியான்மார் அரசின் பேச்சாளர் கடந்த புதன்கிழமை (1) தெரிவித்துள்ளார்.

தாம் வாழும் பிரதேசங்களுக்கு சுயாட்சி வேண்டி இந்த இனங்களைச் சேர்ந்த குழுவினர் போராடி வருகின்றனர். அவர்களில் ஏறத்தாள 15,000 படையினர் உள்ளதாக நம்பப்படுகின்றது. அண்மைக்காலங்களாக இடம்பெற்றுவரும் சண்டைகளில் தாம் சீனாவுக்கும் மியான்மாருக்கும் இடையிலான பல காவல்நிலைகள் மற்றும் வீதிகளை கைப்பற்றியுள்ளதாக இந்த குழுக்கள் தெரிவித்துள்ளன.

## தாய்வானில் ... தொடர்ச்சி ...

வருடங்களில் அது ஆரம்ப மாகலாம் என தெரிவிக்கப்பட்டபொதும், அது மிக விரைவாக ஆரம்பமாவதற்கான அறிகறிகளே தென்படுகின்றது.

அமெரிக்கா அதற்கு தயாராகின்றது. அதற்கான வரவுசெலவுத்திட்டமும் தயராகின்றது. நிதி தொடர்பில் அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் பேச்சக்களை ஆரம்பித்துள்ளது. மேற்குலகத்தின் படை கட்டமைப்பை மறுசீரமைப்பதே தற்போதைய முதன்தை நோக்காக அவர்கள் கருதுகின்றனர். என அது மேலும் தெரிவித்துள்ளது.

## பண்ணையாளர் ... தொடர்ச்சி ...

நிலை யில், அனைத்துலக சமூகமோ அல்லது இந்தியாவோ இந்த விடையத்தில் தமிழ் மக்களுக்கு எந்த உதவி களையும் வழங்க முன்வரவில்லை என தெரிவிக் கப்படுகின்றது.

இந்தநிலையில், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பண்ணையாளர்களுக்கு ஆதரவான அறவழிப்போராட்டம் ஒன்றை வியாழக்கிழமை(2) முன்னெடுத்திருந்தனர். இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களின் பேரணி காலை 10 மணிக்கு பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமாகி சித்தாண்டி போராட்டக்களத்தை சென்றடைந்தது.

### சுமந்திரன் இத ... தொடர்ச்சி ...

இது இரண்டு நாட்டு மீனவர்கள் சம்பந்தப் பட்ட விடயம். இது காலம் காலமாக பேசபட்டு வருகின்ற விடயம். இதில் இந்திய மீனவர் சங்கமும் பேசி சில விடயங்களை ஏற்றுக்கொண்டு அதனை செய்யாமல் உள்ளது. இதில் முக்கியமான விடயம் வடிவலையை பயன் படுத்தல்.

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை யில் இந்திய தமிழ் மீனவர்களும் வடக்கு தமிழ் மீனவர்களும் அடிக்கடி மோதிக் கொள்வதன் ஊடாக. தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையில் ஒரு விரிசலை ஏற்படுத்தலாம் என்ற வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

அதேபோன்று இந்திய அரசாங்கத்தின் ராஜதந்திரிகள் ராமேஸ்வரம் சென்று மீனவர் தொழில் சங்கங்களை எல்லாம் அழைத்து பேசப்பட்டு இருக்கின்றன . ஆனால் நடைமுறையில் பல விடயங்கள் வரவில்லை. ஆகவே இது ஒரு சிக்கலான விடயம். இரண்டு நாட்டு மீனவர்கள் நலன் சார்ந்து முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக என்னை பொறுத்தவரை யில் முக்கியமாக யாழ்ப்பாணத்து தமிழ் மீனவர்களும், இந்திய தமிழ் மீனவர்களும் நேரடியாக பேசி சில முடிவுகள் எடுக்கப்பட்டது அதில் முன்னேற்றம் இருந்தது. அதன் இடையில் ஜீ.எல். பீரிஸ் அவர்கள் புகுந்து குழப்பி இருந்தது நினைவில் உள்ளது.

ஆகவே இந்த மீனவர்களது பிரச்சினை இரண்டு நாட்டு மீனவர்களும், இரண்டு நாட்டு அரசாங்கம் இணைந்து ஒரு நல்ல தீர்வை எட்ட வேண்டிய இருக்கிறது. அதில் குறிப்பான விட யம் இந்திய மீனவர்கள் இழுவை படகு மூலம் மடிவலையை பயன்படுத்துகின்ற போது. கடலில் உள்ள பவளப்பாறைகள் அழிவடைந்து அங்கு மீன் உற்பத்திகள் இல்லாமல் போவதால் இதற்கு ஒரு சுற்று நிருபம் கொண்டு வரப்பட்டதாக நான் நினைக்கின்றேன்.

இதனை சுமுகமாக நிறுத்துவதற்கு தற் போது கடல் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கிறார் அதற்கான சரியான தீர்வை எடுக்கும் போது மீனவர் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் என்று நம்புகிறேன்.

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கு நேரம் கேட்டு கடிதம் எழுதுவதற்கான அழைப்பு ஒன்றை சி.வி. விக்னேஸ்வரன் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு விடுத்திருந்தார். அந்தக் கடிதத்தை அனுப்பு வது இன்னும் தாமதமடைவதற்கு காரணம் என்ன?**

இந்த விடயத்தை பொறுத்தவரையில் இந்திய பிரதமர் மற்றும் அவர் தலைமையிலான பிரதிநிதிகளை சந்திப்பதற்கான ஒரு வேண்டு கோளை ஒன்றரை வருடங்களுக்கு முன்பு. ஏழு கட்சிகள் அதாவது D.T.N.A கட்சியில் உள்ள ஐந்து கட்சிகளும் திரு.விக்கினேஸ்வரன் மற்றும் திரு. மாவை சேனாதிராசா ஆகியோர் இணைந்து கையொப்பம் இடப்பட்ட கடிதம் அவர்களிடம் சென்றடைந்திருக்கிறது. அது அனைவருக்கும் தெரியும்.

அதன்பிறகு D.T.N.A தனியாகவும் ஒரு கடிதம் அனுப்பி இருந்தது. அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. தற்போது இந்த கடிதத்தை திரு. விக்கினேஸ்வரன் அவர்களே அனுப்புவதற்காக தீர்மானித்து உள்ளார். அந்தவகையில் அவரிடம் உள்ள தனிப்பட்ட தொடர்புகளை வைத்து கொண்டு இதற்கான வேலைகளை ஒழுங்கு செய் வதாக அறிய முடிகிறது.

**அடுத்த ஆண்டு தேர்தல் ஆண் டாக இருக்கும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறுமாக இருந்தால் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மா னித்துள்ளது. இதன் மூலமாக எதனைச் சாதிக்க முடியும் என எதிர்பார்க்கின்றீர்கள்?**

நல்ல கேள்வி இதுவரை காலமும் நாங்கள் மாறி மாறி பலருக்கு வாக்களித்தோம். பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாசா, போன்றவர்களுக்கு வாக்களித்தோம். இவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று. அதன் பின் வடக்கு கிழக்கு தாயக பூமி எங்கும் பௌத்த விகாரை அமைப்பதும் சிங்கள குடியேற்றத்தை அதிகரிக்கவும் அதில் திரு.சம்பந்தன் அவர்களை தமிழருக்கு எதிராக செயல்படுகின்றார்கள்.

தற்போது உள்ள 13 ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த சில மாதங்களாக பேசப்பட்டது . ஆனால் ரணில் விக்கிரமசிங்க சில அதிகாரங்களை தரமுடியாது என்று கூறி வந்தார். அதன் பிறகு அதனை கண்டுகொள்ளாம விட்டு விட்டார்.

இரண்டாவது பாராளுமன்றம் சென்று இந்த 13 ஆவது திருத்த சட்டத்தை குழப்பகரமான சூழலுக்கு கொண்டு சென்றுவிட்டார்.

ஆகவே இவர்களுக்கு வாக்களிப்பதற்கும் இவர்களுக்கு பின்னால் செல்வதும் எமது வழக்கமாக உள்ளது.

ஆகவே எங்களுடைய பிரச்சினைகளை அறிந்து கொண்டு அதனை தீர்ப்பதற்கு ஒரு பிடி எங்களிடம் இருக்க வேண்டும். யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத பலம் பெற்று இருந்ததால் ஒரு பிடி இருந்தது. அதனால் தான் பேச்சுவார்த்தைக்கு சென்றார்கள்.

இப்போது உலகத்திற்கு பிரச்சினைகளை தீர்ப்பதாக வெறுமனே கூறிக்கொண்டு . வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த மயமாக்கல் செய்து சிங்கள குடியேற்றத்தை அதிகரிக்கும் வேலைகளை செய்து வருகின்றனர்.

ஆகவே தமிழ் மக்களிடம் இருந்து பேசுவதற்கான ஒரு பிடி இருக்க வேண்டும். தற்போது தமிழ் மக்களிடம் ஏதாவது கூறி அவர்களது வாக்குகளை பெறுவதற்கு வியூகம் வகுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே தமிழ் தலைமைகள் ஒன்று பட்டு ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவதன் ஊடாக இலங்கையில் தமிழ் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான சர்வதேசத்தின் தலையீடு. அல்லது இந்தியாவின் தலையீடு ஊடாக இனப்பிரச்சனை குறுகிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும் இதுவே தமிழர்களது முடிவாகும். என்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக இதனை கருதி செயற் பட வேண்டும்.

அதன் ஊடாக நான் முன்பு கூறியதுபோல். தமிழர்களது வாக்குகளை பெற விரும்புபவர்கள் தமிழர்களுடன் பேசவேண்டும் என்று எம்மோடு பேச வருவார்கள். அதன் ஊடாக எங்களுடைய இருப்பு எமது இலக்கு தொடர்பாக நாங்கள் முன்னேற வேண்டும் என நம்புகிறோம். இதுதான் எங்களுடைய பொது வேட்பாளரை போடுவதில் உள்ள நிலைப்பாடாக உள்ளது.

• • •

### ஆக்கிரமிப்பதில் ... தொடர்ச்சி ...

போராட்டம் என்பது கிழக்கு பல்கலைகழக மாணவர்கள் மத்தியில் இருந்துவெளிப்படுவது குறைந்தளவிலேயே காணப்பட்டுவந்த நிலையில் அண்மையில் வீரியம்கொண்ட போராட்டம் ஒன்று நடைபெற்றமையானது ஒட்டுமொத்த வட கிழக்கினையும் ஆட்டம்காணவைத்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான போராட்டமானது பல்கலைக்கழகத்திலிருந்து சுமார் 05 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் பேரணியாக சென்றதானது பாரிய எழுச்சியை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் அத்துமீறிய குடியேற்ற வாசிகளுக்கும் எதிராக எழுப்பிய கோசங்கள் என்பதை வெறுமனே யாரும் சாதாரணமாக கடந்துசெல்லமுடியாது. இன்று கிழக்கு பல்க லைக்கழகத்தின் மாணவர்கள் மத்தியில் ஏற் பட்டுள்ள ஏழுச்சியானது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்திலும் ஏற்படவேண்டும்.ஒட்டு மொத்த கிழக்கிலும் இந்த ஏழுச்சி ஏற்படவேண்டுமானால் வடகிழக்கு மாகாணம் எங்கும் எழுச்சி ஏற்பட வேண்டும்.

மட்டக்களப்பில் கால்நடை பண்ணையா ளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், "தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தினை பறித்தல் என்பது அவர்களை வாழ விடாமல் அகற்றுவதற்கான முயற்சியை முன் னெடுத்துவருகின்றது.அந்த முன்னெடுப்பு களில் ஒன்றுதான் மயிலத்தமடு, மாதவனை பகுதிய செயற்பாடாகும்.இது இன்றுநேற்று அல்ல டட்லி சேனநாயக்க காலத்தில் நினைத்த விடயத்தினை ஜேஆர் காலத்தில் நடைமுறைப்படுத்த முயற்சித் தார்கள்.தற்போது ஜனநாயகம் பேசிக் கொண்டு நிலங்களை பறித்துக்கொண்டு சிங்கள மயப்படுத்தி கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை இல்லாமல்செய்வதில் இந்த அரசாங்கம் பாரிய முனைப்பினை காட்டிவருகின்றது

அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்பு களையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்துவரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதேநிலைமை யினை எதிர்கொண்டுள்ள காலசூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம்,வ ஞ்சிக்கப்படுகின்றோம்.அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங் களது கடமையாகும்.இது தொடர்பில் சட்ட நட வடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்ட விரோத குடியேற்றகாரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர்சிலையினை வைத்தார்கள்,சட்ட விரோதமாக அம்பிட்டிய தலைமையிலான அராஜககுழு தொடர்ந்து செயற் பட்டுவருகின்றது.முன்னாள் ஆளுனர் அனுராதா ஜகம்பத்தலைமையில்நிலப்பறிப்புசெயற்பாடுகள் இந்த விடயம் தொடர்பில் சட்ட ரீதியான நடைமுறைகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் நாங்கள் வடகிழக்கில் மாபெரும் மக்கள் அலை யினை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலை சொல்லவேண்டிய நாள் வெகுதொலைவில் இல்லை"என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த கருத்து வெறும் அரசியல் ரீதியான கருத்தாக இல்லாமல் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் வடகிழக்கு ரீதியாக எழுச்சிபெறும்போது கிழக்கில் தமிழர் களின் நிலங்கள் பாதுகாக்கப்படும். இன்று மயிலத்தமடு,மாதவனையில் அத்துமீறிய காணி அபகரிப்புகளில் ஈடுபடுவோருக்கு தென்னிலங்கை யில் உள்ள இனவாத சக்திகள் பாரியளவில் உதவிகளை வழங்கிவரும் நிலையில் இவற்றினை தடுத்து நிறுத்தி தமிழர்களின் தாயப்பகுதியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

• • •

## காஸாப் போரின் ... தொடர்ச்சி ...

அளவில் ஏற்படுத்தும் என்று கூறி, ஹமாசைத் தோற்கடிப்பதற்கென படிப்படியான ஒரு தாக்குதல் வியூகத்தை வகுக்குமாறு இஸ்ரேலை அமெரிக்கா திரைமறைவில் வலியுறுத்தி வருகிறது. இஸ்ரேலின் மீது ஹமாஸ் தாக்குதலை மேற்கொண்டவுடன் காஸா மீது ஓர் மாபெரும் தரைத்தாக்குதலை மேற்கொள்ளவிருப்பதாக இஸ்ரேல் முன்னர் அறிவிப்பை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் மீதான போர் தற்போது ஒரு முக்கிய கட்டத்தை அடைந்திருப்பதாகவும், விமானத்தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் தரைத்தாக்குதல்களைத் தாம் விரிவாக்கியிருப்பதாகவும் இஸ்ரேலிய பிரதம மந்திரியான நெத்தன்யாகு மேற்கொண்ட அறிவித்தல், அமெரிக்காவின் ஆலோசனையைத் தொடர்ந்து, ஒரு முழு அளவிலான ஊடுருவல் நடவடிக்கை கைவிடப்பட்டிருப்பதையே பிரதிபலிக்கிறது. போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அதே வேளை ஹமாசின் பிடியில் இருக்கும் 200 பணயக் கைதிகளின் விடுதலை தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது அவசியமானது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹமாசுக்கு எதிரான போரில் இஸ்ரேலின் இலக்குகள் தற்போது மாற்றமடைந்திருக்கின்றன. ஆனால் இஸ்ரேல் இதனைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இஸ்ரேல் அரசு தற்போது சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது என்று மத்திய கிழக்கு நிறுவனத்தில் பாதுகாப்பு தொடர்பான திட்டத்துக்கான இயக்குநராகப் பணிபுரிகின்ற பிலால் ஸாப் (Bilal Y.Saab) தெரிவித்தார்.

ஒரு மிகப் பாரிய அளவிலான தரைவழி ஊடுருவலுக்குப் பதிலாக, ஹமாசைச் சுற்றி வளைத்து, இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல்களை முன்னெடுக்கும் அச்சுறுத்தல் இல்லாமற் போகும் வரை அதன் வலுவை முற்றுமுழுதாகக் குறைப்பதையே தற்போது இஸ்ரேல் அரசு இலக்காகக் கொண்டிருக்கிறது.

இருப்பினும், ஒரு மெதுவான அணுகுமுறை நீண்டகால அடிப்படையில் வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடும். குறிப்பிட்ட பிரதேசத்தில் இஸ்ரேல் கொண்டிருக்கும் அந்தஸ்த்தும் அதன் பாதுகாப்பும் காலப்போக்கில் கேள்விக்குறியாக மாறக்கூடும்.

ஹமாசின் ஒரு இராணுவக்கட்டமைப்பையே தாம் தாக்கியதாக காஸாவிலுள்ள ஏதிலிகள் மையத்தின் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலுக்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சு நியாயம் கற்பித்த அதே நேரம், மத்திய கிழக்கின் தலைவர்களோ இஸ்ரேலின் இந்த நியாயத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. காஸாவிலுள்ள மருத்துவமனை ஒன்று தாக்கப்பட்டு அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் அங்கு கொல்லப்பட்ட போது, காஸாவிலுள்ள போராளிகள் ஏவிய ஏவுகணை ஒன்று திசைமாறி காஸாவில் உள்ள மருத்துவமனை மீது விழுந்ததாக இஸ்ரேல் காரணங்கற்பித்த பின்னரும், பலர் அந்தத் தாக்குதலுக்குத் தொடர்ந்து தமது கண்டனத்தைத் தெரிவித்து வருகிறார்கள். (அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகளும் இஸ்ரேலின் விளக்கத்தை ஆதரிக்கின்றன).

“அரேபியத் தலைவர்கள் பலர் தனிப்பட்ட விதத்தில் ஹமாசை வெறுப்பது மட்டுமல்லாமல் அது அழிக்கப்படுவது தொடர்பாக மகிழ்ச்சியடைவார்கள்” என்று பீமான் தெரிவித்தார். ஆனால் அதற்கு மாறாக அந்த நாடுகளில் வாழுகின்ற பொதுமக்களோ இஸ்ரேலுக்குப் பலத்த அடி விழுந்தது தொடர்பாகத் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அதே நேரம், காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் அழிவுத் தாக்குதல்கள் தொடர்பாக தமது கடுங்கோபத்தையும் வெளிப் படுத்தியிருக்கின்றனர். இஸ்ரேலுடன் சுமூகமான உறவுகளை ஏற்படுத்தியுள்ள பாறெய்ன், எகிப்து உள்ளிட்ட அரேபிய நாடுகளில் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு எதிராகத் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றன.

இஸ்ரேலுடன் கிட்டத்தட்ட ஒரு சுமூக உறவை ஏற்படுத்தும் நிலைக்கு சவூதி அரேபியா அண்மையில் வந்திருந்தது. ‘மத்திய கிழக்கில் ஒரு உறுதியான சூழலை ஏற்படுத்த அது பெரிதும் உதவும்’ என்று பிளிங்கன் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தார். இவற்றுக்கு மாறாக, இஸ்ரேலின் பரப்புரைகளுக்கு எதிராக அந்த நாடு பல விமர்சன அறிக்கைகளை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

“பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்துருவாக்கம் எப்படிக் கையாளப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் ஏதாவது புதிய அச்சுறுத்தல்கள் ஏற்படுமா என்பது தங்கியிருக்கிறது” என்று புறூக்கிங் நிறுவனத்தில் உள்ள மத்திய கிழக்குக் கொள்கைக்கான மையத்தில் வருகை தரும் பேராசிரியராகப் பணிபுரிகின்ற ஷறான் கிரெவால் (Sharan Grewal) தெளிவுபடுத்தினார்.

ஏற்கனவே பலமாக இருக்கின்ற அரசுகள் தமது பலத்தின் எல்லைக்குச் செல்வதற்கு ஹமாஸ் போன்ற அமைப்புகள் அவற்றைத் தூண்டும் என்று பயங்கரவாதத்தின் மூலோபாய விளக்கம் எமக்குற் கற்பிக்கிறது என்று கிறேவால் கூறினார். ஒரு முழு அளவிலான தரைவழி ஆக்கிரமிப்பு பாலஸ்தீனத்திலும் அதற்கு வெளியேயும் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வலைகளை அதிகரிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அழிக்கப்பட்டாலும் கூட, இன்னொரு குழு அவர்களது இடத்தை எடுப்பதை இவ்வாறான உணர்வுகள் உறுதிப்படுத்தும். வழமையாக நடப்பது போன்று, வன்முறையைத் தொடர்வது ஓர் இலகுவான வழிமுறையாக இருக்கலாம். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் வெளியே வந்து அமைதிக்கான ஒரு நீண்டகாலத் தீர்வைப் பரிசீலிப்பது ஒரு கடினமான பாதையாக அமையலாம்.

**நன்றி: ஏபிசிநியூஸ்**

## நிர்மலா சீதாரா... தொடர்ச்சி ...

தலைவர்களுடனான சந்திப்புகள் உள்ளடக்கப்படவில்லை. வழமையாக இலங்கை வரும் வெளிநாட்டுத் தலைவர்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்திப்பதை “சம்பிரதாயமாக“ கொண்டிருந்தாலும் கூட, இந்திய அமைச்சருடன் அவ்வாறான சந்திப்பு எதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு தமிழ்த் தலைவர்களைச் சந்திக்காததற்கான சரியான காரணங்கள் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. அமைச்சர் சீதாராமனின் பயணம் பொருளாதார ஒத்துழைப்பு, கடன் மறுசீரமைப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் போன்ற பரந்த கருப்பொருள்களில் முதன்மையாக கவனம் செலுத்தியிருக்கலாம். இந்த விவாதங்கள் வடக்கு கிழக்கு தமிழ்த் தலைவர்களுடன் நேரடியாக ஈடுபட வேண்டிய அவசியமில்லை என அவர் கருதியிருக்கலாம்.

அதனைவிட, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பொதுவான கருத்தொருமைப் பாட்டுக்கு வராத நிலையில், அவர்களுடன் பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அவருக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்த இந்திய இராஜதந்திரத் தரப்புக்கள் கருதியிருக்கலாம்.

வடக்கு -கிழக்கு தமிழ்த் தலைவர்களுடன் ஈடுபடுவதற்கு உணர்திறன் மற்றும் நுணுக்கமான அணுகுமுறைகள் தேவை. ஒருவேளை தமிழ் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்க்க தனி உரையாடல்கள் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார். அத்துடன், அவர்கள் சார்ந்த அரசியல் விவகாரங்களை வெளிவிவகார அமைச்சர், அல்லது பாதுகாப்பு அமைச்சர் பேசுவதே பொருத்தமானது என்றும் இந்திய இராஜந்திரிகள் கருதியிருக்கலாம்.

அமைச்சர் சீதாராமனின் பயணத் திட்டம், சில விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து, இறுக்கமாக திட்டமிடப்பட்டிருந்தது. பௌத்த தலைவர்களுடனான சந்திப்புகள் மற்றும் “நாம் 200” நிகழ்வில் உரையாற்றுவது முன்னுரிமை பெற்றிருந்தது. அவரது விஜயம் நாம் 200 நிகழ்வை நோக்கியதாக இருந்தமையால், மலையகத் தமிழர்களுக்கான சில செய்திகளை அவர் பகிரங்கமாகவே சொல்லியிருக்கின்றார்.

### திருக்கோணேஸ்வரம்

வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களை இந்திய அமைச்சர் சந்திக்கவில்லை என்றாலும் கூட, திருமலையில் தமிழ் சமூகத்தினரை அவர் சந்தித்திருப்பது முக்கியமானது. சந்திப்பு மட்டுமன்றி அங்கு அவர் வழங்கிய வாக்குறுதியும் பிரதானமானது. ஈழத் தமிழர்கள் திருமலையைப் பாதுகாப்பதற்கு அந்த வாக்குறுதியை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

“திருக்கேதீஸ்வரத்தைப் புனமைத்துத் தந்தமை போல் பாடல் பெற்ற மற்றைய ஸ்தலமான திருக்கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாகப் புனரமைக்கும் திட்டம் முன்வைக்கப்படுமானால் அதனை இந்தியா சாதகமாகப் பரிசீலித்து அதற்கு உதவும்” என்ற உறுதிமொழியைத்தான் நிர்மலா சீதாராமன் வழங்கியிருக்கின்றார். திருக்கோணேஸ்வரரின் புனித பூமியில் வைத்து இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார்.

நிர்மலா சீதாராமன் வியாழக்கிழமை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார். ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று உரையாடினர். அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு. திருமுருகன் அப்போது ஆலய நிர்வாகிகள் சார்பில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

“போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு, ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கற்களால், பெருங்கோயிலாகப் புனரமைத்துத் தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும்” என்ற கோரிக்கை அப்போது அவரால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையைச் செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர், “மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத் தையும் புனரமைக்க உதவ முடியும்” என்று தெரிவித்தார். அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள், அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்மலா சீதாராமன் தெரிவித்தமை முக்கியமான விடயமாகும்.

திருக்கோணேஸ்வரத்தை சிங்கள மயமாக்குவதற்கு தொல்பொருள்திணைக்களமும், பௌத்த பிக்குகளும் முழுமூச்சாக களமிறங்கியிருக்கும் நிலையில்தான் இந்திய அமைச்சர் இந்த வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார். திருமலை தமிழர்களிடம் இருப்பதுதான் தன்னுடைய மூலோபாய நலன்களுக்கும் அவசியம் என்பதை புதுடில்லி உணர்கிறது.

அதேவேளையில் கோணேஸ்வரர் கோவில் புனரமைப்பில் இந்தியாவை நேரடியாகச் சம்பந்தபடுத்துவதன் மூலமாகவே அதனைப் பாதுகாக்க முடியும் என்ற யதார்த்தத்தையும் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

• • •